விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

35-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 41-ம் இலக்கம்

# 23-10-60 விசுவாசப் பரப்புதல் ஞாயிறு

## சாதாரண கத்தோலிக்கரின்

### வேதப்பரப்புதல் தொண்டு

ஒருமனிதனைக் கௌரவப்படுத்துவது அவனுடையசெயலே. போதனையிலும் சாதனையே சாலச்சிறந்தது. போதனையினால் சிலரை நல்வழிப்படுத்தலாம். ஆனால்,சாலச்சிறந்த நன்முன்மாதிரிகையினால் பெருந்திரளான மக்களைத் திருத்தலாம்.

விசுவாசப்பரப்புதல் ஞாயிறன்று கத்தோலிக்கமக்களெல்லாம் ஏகோபித்துச் செயலாற்ற வேண்டுமென்று திருச்சபை தூண்டுகின்றது. கத்தோலிக்கமக்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து தூக்கிச்செல்லும் விசுவாச விளக்கின் சுடர்ஒளியில் அதைப்பார்த்துநிற்கும் அஞ்ஞானிகளின் உள்ளங்கள் மெய்ஞ்ஞானஒளி பெறவேண்டும். அங்ஙனம்அவர்கள்பெற்றமெய்ஞ்ஞான ஒளி அவர்களைப் பரலோக பாதையில் வழிநடக்கச் செய்யவேண்டும்.

ஒருவர்த்தகஸ்தாபனம் விருத்தியடைதற்கு அதன்சொந்தக்காரன் பெருமுயற்சிகள் செய்வான். வர்த்தகத்துறையில் கைதேர்ந்த அனுபவம் பெற்ற குணசாலிகளை வேலைக்குஅமர்த்துவான்.

அதேபோன்று கிறீஸ்தவர்களும் வேதபோதகவேலையை உலகில் தொடர்ந்துநடாத்தக் கிறீஸ்துநாதரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். கிறீஸ்துநாதரின் போதனையை உலகம் அறிந்திருக்கிறது. ஆதலால்,உலகம் கிறீஸ்தவர்களை விழித்தகண்களுடன்நோக்குகின்றது.

உலகளவுபோதனையிலும் ஒருபிடிமண்அளவு சாதனைசிறந்தது. இக்காரணத்தினாலேயே பரிசுத்தபிதா கத்தோலிக்கமக்களை வேதப்பரப்புதல் பணியில் ஈடுபடும்படி தூண்டிவருகிறார். இன்றைய உலகம் கடவுளை மறந்து நாஸ்திகபாதையில் விரைந்து செல்வதைக்கண்ட பரிசுத்தபிதா மிகுந்தகவலையடைகிறார். கத்தோலிக்கர்களிற்பலர் தேவநேசத்தினால் உந்தப்பட்டுத் தங்கள்சமய வழிபாடுகளை நடத்தாது பழக்கத்திலேமட்டும் செயலாற்றிவருகிறார்கள். அவர்களின் விசுவாசக்கண்களை உலகத்தின் சுகபோகங்கள் மறைத்துவிட்டனபோலும்.

கத்தோலிக்கமக்களின் இத்தகைய பாராகண்டிதத்தைப் பரிசுத்தபிதா மிகவும் கண்டித்துச் சமய அனுசரணைகளைப் பக்திவைராக்கியத்துடனும்,தேவநேசத்துடனும் புனருத்தாரணம் செய்யவேண்டுமெனக் கூறுகின்றார். கிறீஸ்துநாதரின் உலக இரட்சணிய வேலையைஒவ்வொருகிறீஸ்தவனும் தனதுஉரிமையும், கடமையுமென உணர்ந்து செயலாற்ற வேண்டும்என்கிறார். கிறீஸ்துநாதரை எமதுவீட்டில் மட்டும் வைத்திருந்தால்போதாது, அவரைஅறியாத இலட்சக்கணக்கான மக்கள்சமூகத்திலும் எமதுநாளாந்த வாழ்க்கையில் கிறீஸ்துநாதரைக் கொண்டுசெல்லவேண்டும். கிறீஸ்துநாதர் கிறீஸ்தவர்களுக்கு மட்டுமல்ல எல்லாநாடுகளுக்கும், எல்லாமக்களுக்கும் சதாகாலமும் சொந்தமானவர். ஆதலால் அவரை உலகவிவகாரங்களில் இருந்து ஒதுக்கி வைக்கக் கூடாது. ஆகவே, கிறீஸ்துநாதரை எமதுவேலை அலுவல்கள்முதல், விளையாட்டுஇடங்கள்வரை கொண்டுசெல்லவேண்டும். அங்கெல்லாம் அவருக்கு உரியஇடத்தைக் கொடுக்கவேண்டும். பட்டணங்களுக்கும், பட்டிக்காடுகளுக்கும், ஏழைகள் சமூகங்களுக்கும், செல்வங்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## செஞ்சீனவில் சிறைவாசஞ்செய்யும் அமெரிக்க மேற்றிராணிமார்

### நாம் ஒருவர் ஒருவரைத் திரும்பவும் மோட்சத்தில் காண்போம்

ஐக்கிய அமெரிக்கதேச கம்பர்லாந்தைச்சேர்ந்த நீதியரசர் வில்லியம் வால்ஷ் அவர்கள் 10,000மைலுக்குமேல் பிரயாணஞ்செய்து செஞ்சீனபோய்ச்சேர்ந்து அங்கு சீனக்கம்யூனிஸ்த ஆட்சிக்குமாருக "வேவு" பார்த்தாரென்ற குற்றச்சாட்டின் பேரிலே இருபதுவருட சிறைத்தண்டனை விதிக்கப்பெற்று ஷாங்காய்நகரில் சிறைவாசஞ்செய்துவரும் தமதுஉடன்பிறந்த சகோதரரும், காலங்கண்ட மிஷனரியுமாகிய மகாவந். ஜேம்ஸ் வால்ஷ்மேற்றிராணியாரைச் சந்தித்துக்கொண்டு சமீபத்திலே ஹொங்கோங்தீவுபோய்ச் சேரலாயினர். இவர் தமது சகோதரரை மும்முறையே சந்திக்கலாயினர். மும்முறையும் சொற்பநேரமே அவரைச்சந்தித்துப்பேச அனுமதிக்கப்பெற்றார்.

70வயதுடையவரான இவர் ஷாங்காய் நகரிலிருந்து நீண்டதூர றெயின்வண்டிப்பிரயாணம் நடத்திவிட்டுத் திரும்பவும் ஹொங்கோங்தீவுபோய்ச் சேர்ந்தபோது அதிகம்களைகொண்டவராய்க் காணப்பட்டார். இவர் தமதுசகோதரரைச் சந்தித்ததும், அவருடன் சம்பாஷித்ததும்பற்றித் தெரிவித்தது வருமாறு: "எனதுசகோதரர் உடல் மெலிந்துபோய் இருக்கிறார். ஆனால், சௌக்கியமாயும், சந்தோஷமாயும் தேவசித்தத்துக்கு முற்றிலுமேபணிந்தவராயும் இருக்கிறார். எங்கள்சந்திப்பு வாட்வீதிச் சிறைச்சாலையிலுள்ள ஒரு அறையிலே நடைபெறலாயிற்று. எங்களைச்சிறைச்சாலை அதிகாரி ஒருவரும், இரு காவலர்களும், துவிபாஷிகர்ஒருவரும் கண்காணித்தனர். ஒரு கணப்பொழுதுதானும் எனதுசகோதரருடன் ஒருபோதுமே தனிமையாயிருக்க நான் அனுமதிக்கப்படவில்லை.

"இற்றைக்குப் பன்னிருவருடங்களின்முன் நான்கண்டதிலும்பார்க்கத் தற்போது எனதுசகோதரர் கொஞ்சம் மெலிந்திருக்கிறார். ஆனால்,நல்லசுகத்துடன் இருக்கிறார். அவருடையகைகள் அதிகம்மெலிந்தனவாய்க் காணப்பட்டன. அவருடையதோளின்மேல் எனதுகையைவைத்தபோது உட்சட்டையினுள் அவர் எலும்புந்தோலுமாய் இருப்பதாக உணர்ந்தேன். "நான் சந்தோஷமாயிருக்கிறேன்; சிறைச்சாலை ஆஸ்பத்திரிக் கட்டடத்தின் ஒரு பகுதியில் நான் வசித்துவருகிறேன்; இது என்னுடையவயதையிட்டல்லாது நான் சுகத்தாழ்வுடையவராய் இருப்பதையிட்டல்ல; நாளொன்றுக்கு மூன்றுவேளைப்போசனம் எனக்குத் தரப்படுகிறதென்று நான்உறுதியாகக்கூறுகிறேன்; உணவு சாதாரணமானதாய் இருந்தாலும் எனக்குப் போதுமானது; ஒருபடுக்கையுடனும், மற்றும் சகலவசதிகளுடனும்கூடிய சிற்றறைஒன்று எனக்குத் தரப்பட்டிருக்கிறது" என்று அவர் என்னிடம் கூறினார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## இரண்டாயிரம் வருடங்களாக எங்கேயிருந்தீர்கள் ?

வடசீனவிலே பலவருடங்களின் முன் வண. போட்சுவாமியார் ஒருநாட்காலை பனிக்கட்டியால்மூடப்பெற்ற ஒரு பாதையூடே நடந்துசென்றார். குளிர் மிகுதியால் ஏற்பட்ட கைவிறைப்பைத் தீர்க்கக் கையைப் பிசைந்துகொண்டே அவர் சென்றார். திடீரெனப் பாதையோரத்தில்கிடந்த பொதியொன்று அவர்கண்ணில்பட்டது. கூர்ந்துகவனித்தபோது கந்தையணிந்தஒருகிழவி குளிரால்விறைத்துச் செத்தவளைப் போல் கிடக்கக்கண்டார்.

சுவாமியார் அவளைத்தூக்கியெடுத்துக் கைப்பந்தமாகத் தமதுகுருமனைக்குக்கொண்டுசென்றார். கிழவி அங்குமிங்கும் வெருண்டபார்வையோடு பார்த்தாள். கொள்ளைக்காரரால் தனதுகிராமம் நிர்மூலமாக்கப்பட்டதாகவும், தனக்கு அடைக்கலங்கொடுக்கக்கூடிய ஒருசிநேகிதனின் வீட்டைத் தேடிப் பலமைல்தூரம் தான்நடந்துவந்ததாகவும், பசிக்களையையும், கடுங்குளிரையும் தாங்கமுடியாது தான் பாதையோரம் விழுந்ததாகவும் கிழவி கூறினாள்.

"என்னைத்தூக்கி இங்கு ஏன் கொண்டுவந்தீர்கள்? இந்தக்கிழட்டுப் பிணம் எக்கதியாயினும் யார்தான் கவலைப்படப்போகிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஏனென்றால், தேவன் உன்னைப் படைத்தார்; அவரே என்னையும் படைத்தார்; தேவன் எங்கள்பிதா; நீயும், நானும் சகோதரர்கள்; தேவன் எங்களைநேசிக்கிறார்; அதுபோல நாங்களும் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டுமென அவர்விரும்புகிறார்" என்று பதில்கொடுத்தார் சுவாமியார்.

இதைக்கேட்டகிழவி அதிசயப்பட்டாள். தனக்குள்ளே அமைதியாகச் சிந்தித்தாள். சற்றுப்பொறுத்து, ஆ! என்ன அழகான வார்த்தைகள்! இந்தச் செய்திகளை [illegible] யார்? அவ்வித நல்லதேவனைப்பற்றி உமக்கு எப்படித்தெரியும்?" என்று கேட்டாள்.

மரணத்தறுவாயிலிருந்த கிழவிக்குச் சுருக்கமாகவும், தெளிவாகவும் கிறீஸ்துநாதரின் சரித்திரத்தைச்சொன்னார் குருவானவர். தேவன் எங்களை எவ்வளவாக நேசித்தாரென்றால், அவர் தமதுபிரியகுமாரனைப் பூலோகத்துக்கனுப்பி எங்களோடு வாசஞ்செய்யப் பண்ணினார். இந்தத்தேவகுமாரன் தான் யேசுக்கிறிஸ்துநாதர். நாம் ஒருவரை ஒருவர் நேசிக்கவும், எல்லாரோடும் அன்பாயிருக்கவும் படிப்பித்து வழிகாட்டினார் தேவசுதன்.

கிழவி குருவானவர்சொல்லியதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தபின், "இது எவ்வளவு காலத்துக்கு முன் சம்பவித்தது?" என்றுகேட்டாள்.

"ஏறக்குறைய இரண்டாயிரம்வருடங்களுக்குமுன்" என்றார் குருவானவர்.

கிழவி அதிசயப்பட்டாள். குருவானவரை அண்ணாந்துபார்த்து, "என்ன, அவ்வளவுகாலத்துக்கு முன்பா? அப்படியாயின் நான் ஏன் இதற்குமுன் இதைப்பற்றிஒன்றும் கேள்விப்படவில்லை? இந்தஇரண்டாயிரம் வருடங்களாகக் கிறீஸ்தவர்களாகிய நீங்கள் எங்கேயிருந்தீர்கள்?" என்றுகேட்டாள்.

இந்தக்கேள்விக்குக் குருவானவர் பதில்சொல்லமுடியாது மலைத்தார்.

கிழவிக்கு ஞானஸ்நானம் அவர் கொடுத்தார். ஆனால்,கிழவியின் வார்த்தைகள் அவர்மனதைவிட்டு அகலவில்லை. தேவனுடைய நல்லசெய்தியை—சுவிசேஷத்தை உலகத்தின் எல்லாப்பாகங்களிலும் பரப்பக் கிறீஸ்தவர்கள் ஏன்போதியளவு பிரயாசை எடுப்பதில்லை? ஏன் அசமந்தமாயிருக்கிறார்கள்? நீங்களே பதில்சொல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்புத் தாண்டவன்வெளித் தபால்

ஐப்பசித்திங்கள் 2-ம்நாள்பிறந்தது. தாண்டவன்வெளியிலே தந்தையர் சுப தினத்தைக் கொண்டாட மைந்தரிடையே மகிழ்வுடன் கூடிய ஆடுக்குகள். அதனால் அதிகாலைத்தென்றலில் அசைந்தாடிவந்த ஆலயமணிகளின் ஆர்ப்பரிப்புக்கேட்டு விரைந்துசென்ற மக்களுடன் நானும் பறந்துசென்றேன்.

கடந்த ஆறுவருடகால சேவைகளினால் தாண்டவன்வெளிப் பங்கினைத் திரிகோணமலை மேற்றிராசனத்தின் சிறந்ததோர் பங்காக்கிவைத்த எங்கள் சுவாமி வண. ஜி. ஈ. எல். வம்பேக்அவர்கள் தமது 46-வது பிறந்ததினத்தை ஞாயிறுவாரத்தின் வழமையான இரு பூசைகளிலும் பலிபீடத்தில் ஆரம்பித்தார். மக்கள் பக்திபற்றுதலுடன் தங்கள் தந்தைக்காக வேண்டுதல் செய்துகொண்டனர். அவரை அன்றைய பகல்முழுவதும் மக்கள்சந்தித்து வாழ்த்துக்கூறி ஆசீர் பெற்றேகியவண்ணம் இருந்தனர். யாழ்ப்பாணம், திரிகோணமலைப் பகுதிகளிலிருந்து பிறந்ததின வாழ்த்துகள் வந்துகொண்டிருந்தன. 4-ம்நாள் 4-10-60 விடிந்தது. இங்குள்ள கிளெனி ஆண், பெண்கழகத்தினராலும், அன்பர்களாலும் ஆலயம் தேங்கியிருந்தது. பாட்டுப்பூசையின் பின் பாடசாலையினர்க்கு விசேடஆசீர்வாதம் அருளப்பட்டது. அன்றுகாலை 8-30மணியளவில் வாத்தியங்கள் இசைக்கக் குருமனைமுதல் கிளெனி ஆண்கள்கழகம்வரையுள்ளவீதி தோரணங்கள், துவசங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இருபாடசாலைகளினதும் மாணவர்கள், ஆசிரியர்கள் அணிவகுத்துச்சென்று குருமனைமுன்றிலில் தந்தையரை வரவேற்று, மலர்மாலைசூட்டி ஊர்வலமாக ஆண்கள்கழகத்துக்கு அழைத்துச்சென்றனர். ஆங்கு உயர் மேடையிலே அவர் ஆசனத்தமர்ந்ததும் மாணவர்களால் வாழ்த்துப்பண் படிக்கப்பட்டது. ஆசிரியமணி கே. எல். இராசேந்திரம், திருமதி ஈ. ஏ. நாதன், திருமதி கே. இராசையா, செல்வன் எஸ். யோசவ் ஆசிரியர்களால் சுவாமிகளின் சேவைநலம்பாராட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு இரு பாடசாலைகளினதும் ஆசிரியர்கள் சார்பில் அன்பளிப்பும் வழங்கப்பட்டது. பின்னர் சுவாமியவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புஉபசாரத்துக்கும், அன்பளிப்புக்கும் நன்றிதெரிவித்து நன்மதிகள்கூறி ஆசீர்அளித்தனர். அதன்மேல் மாணவிகள் வாழ்த்துப்பாக்கள் பாடினர். சுவாமியவர்கள் அனைவர்க்கும் மிட்டாய்கள் வழங்கினர். எனக்கும் சிறுபங்குகிடைக்க நானும் சுவைத்தேன்.

பிற்பகல் 2-30மணிக்கு ஒலிபெருக்கியின் இன்னிசை "வம்பேக் பசுந்திடலில்" ஊரைக் கூட்டிவைத்தது. அவரின் பிறந்ததின விழாவையொட்டிக் கிளெனி ஆண், பெண்கழகங்களின் வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. இதற்கு மேற்றிராசன பரிபாலனரான மகாவண. ஜெரோம் டீ சாசுவாமியவர்கள் தலைமைதாங்க, பாடசாலைக்கொடியை விழா நாயகர் இருபாடசாலைகளினதும் தலைமைஆசிரியர்கள்துணைபுரிய ஏற்றிவைத்து மாணவர் மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பின்னர் இல்லவிளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. என்னையும், என்சகாக்களையும் இப்போட்டிகளில் சேர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்குமல்லவா? சிறுவர், சிறுமிகட்கான போட்டிகள் முடிந்ததும், மாணவர் மாணவிகளின் போட்டிகள் முறையாகநடந்தன. இடைவேளையின்போது மாணவர் மாணவிகளின் உடற்பயிற்சிக்காட்சி யாவரும் வியக்கத்தக்கமுறையில் நடைபெற்றது. சிறுவர், மாணவர் மாணவிகளின் வினோதஉடைப்போட்டி, துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, தயிர்ப்பானைஉடைத்தல், ஆசிரியர்க்கான சங்கீதப்பார்சல் ரசிகர்களிடையே உற்சாகத்தையூட்டின. சங்கீதப்பார்சலை ஆசிரியமணி கே. எல். இராசேந்திரம் வெற்றிபெற்றார். அதன்மேல் தலைமை வகித்த சுவாமியவர்கள் நல்லுரைகள் வழங்கி வெற்றியீட்டியோர்க்கு வெள்ளிக்கிண்ணங்களும், பரிசில்களும் வழங்கினர். விளையாட்டுப்போட்டியில் ஜோர்ஜ்இல்லமும், இல்லஅலங்கரிப்பில் இக்னேஷஸ்இல்லமும் முதலாவது இடத்தைப் பெற்றன. விளையாட்டுப் போட்டியை நடாத்திவைத்த செயலாளர் செல்வன் சி. அருளப்பு கந்தசாமி ஆசிரியர் அனைவருக்கும் நன்றிகூறினர். ஜோர்ஜ்இல்லம் வெற்றியீட்டியமைக்காக விழாநாயகரால் அடுத்தநாள் பாடசாலைகட்கு விடுமுறைஅருளப்பட்டது. நானும், என்சகாக்களும் பொழுதுபோனதேதெரியாமல் இருட்டில் தடுமாறி எம்தந்தையர்க்கு வாழ்த்துக்கூறிப்பறந்து எம்இல்லம் சேர்ந்தோம்.

— கொஞ்சம்பறு.

# அதிகாலையில் எங்கே போகிறான்?

(முன்தொடர்ச்சி)

சுவிசேஷத்தில்படித்த அந்தச்சுகிர்த வாக்கியங்கள் மனதில் ஆழ்த்தமாகப் பதிந்தமையால் ஆபேல் படுத்திருந்து கொண்டும் அவைகளையே சிந்தித்தார். சிந்தித்துக்கொண்டேபோய் அயர்ந்து நித்திரைபோயினார். மறுநாள் அதிகாலை வழமைபோலத்துயில்விட்டெழுந்தார். ஆயின் தனதுமனையிலும், வங்கிகளிலுமுள்ள பொக்கிஷங்களையெல்லாம்நினைந்து என்றும்போலப் பெருமிதமும், பெருமையும் அடைந்தவரைப் போல் அல்ல, ஆனால், "பூலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம் ... ஆனால், பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்.. ... உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உன் இருதயமும் இருக்கின்றது" என்று பள்ளிமாணவர்கள் பாடம் சொன்னதுபோல் கவலையுடன் சொல்லிக்கொண்டே எழுந்தார்.

அதன்மேல் கால்முகங்கழுவிச் சுத்தஞ்செய்துகொண்டு முதல்நாள் தான் அணிந்துசென்ற உடையைத் திரும்பவும் அணிந்துகொண்டு தொப்பியை எடுத்துத் தலையில்வைத்தார். ஊன்றுகோலைக் கையிலெடுத்தார். மனையிலிருந்தும் உல்லாசமாக வெளிவாயிலை நோக்கி நடந்துசென்றார். வீதியை அடைந்தார். அதன் இடதுபுறப்பக்கமாக ஊன்றிநோக்கினார். தூரத்தில் ஒருசிறியஉருவம் எதிரே விரைந்துவரக் கண்டார். கண்டதும் அது பேனாட்டாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைத்ததுநினைக்கவில்லை, அவனும்காற்றாய்ப்பறந்தோடிவந்து, 'காலைவந்தனம்! தாத்தா"என்றான். அவரும் சிறுகப் புன்முறுவலோடு, "காலைவந்தனம், தம்பி; உன்னைத்தானே காத்துக்கொண்டு நிற்கிறேன்"என்று சொல்லிமுடித்ததும் இருவரும் கோவிலை நோக்கி வழிநடந்தனர். தனக்கு ஒரு வழித்துணை கிடைத்ததையிட்டுப் பேனாட் மகிழ்ச்சியுற்றான். தனக்கு ஒரு ஞானவழிகாட்டியாக மாத்திரமல்ல, ஒருவழித்துணையாகவும் பேனாட் கிடைத்ததையிட்டுத் தாத்தா பேருவகையுற்றார்.

அதன்மேல் இருவரும் பலகாரியங்களையும்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டு வழிநடந்து கோவிலைஅடைந்து ஒரே ஆசனத்தில் இருவரும் ஒருங்கேயமர்ந்தனர் திவ்வியபூசை ஆரம்பமாயிற்று. இருவரும் பயபக்தியாக அதைக்கண்டனர். சற்பிரசாதம் பெறுகிறநேரம்வந்ததும் பேனாட்எழுந்து கிராதியைநோக்கிச்சென்றான். அவனைப்பின்தொடர்ந்து ஆபேல்தாத்தாவும் சென்றார். இருவரும் அக்கபக்கமாகக் கிராதியில்அமர்ந்து திருவிருந்தருந்தினர். அதன்மேல் இருவரும் ஒருவர்பின் ஒருவராய்ச் சென்று தங்கள்ஆசனத்தைப் போயடைந்தனர். ஏறக்குறைய அரைநூற்றாண்டளவாக ஊதாரிப்பிள்ளைபோல உலகமெங்கும் அலைந்துதிரிந்த ஆபேல் திரும்பவும் தன்பிதாவின் வீட்டிற்குத் திரும்பிய கெட்ட குமாரனைப்போல் ஆண்டவரோடு அன்றதினம் உறவாடிக்கொண்டார். பேனாட்டுக்கு இது விளங்கிக்கொள்ளமுடியாத ஒருபுதிராயிருந்தது. ஏனெனில், ஆபேல் முதல்நாள் பாவசங்கீர்த்தனஞ்செய்தது அவனுக்குத் தெரியாதிருந்தது.

பூசைமுடிந்தது. பேனாட் வழமைபோல் தனது புத்தகப்பையுடனும், காலைச்சாப்பாட்டுடனும் பாடசாலையை நோக்கிப் புறப்பட்டான். ஆபேல்தாத்தா தனது மனையைநோக்கிப் புறப்பட்டுச்சென்றார். செல்லும்போது உன் பொக்கிஷம் எங்கேஇருக்கிறதோ அங்கே உன்இருதயமும் இருக்கிறதென்ற வேதவாக்கியமும் அவரை உறுத்திக்கொண்டே சென்றது. அதனால் இதற்கோர்பரிகாரம் தேடத்தான் வேண்டுமென்ற தீர்மானத்துடன் அவர் தனது மனைபோய்ச் சேர்ந்தார். சேர்ந்ததும் களைதீரும்படியாகக் கொஞ்சம் காப்பி தயாரித்துக் குடித்துவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார். (தொடரும்)

### யாழ்ப்பாணம் அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை
## வெள்ளியூபிலிவிழா

யாழ்ப்பாணம், அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றாஞ்சபை சென்ற4-9-60 செவ்வாய்க்கிழமை தனதுஸ்தாபகரான அர்ச். பிரான்சிஸ்குவின்திருநாளையும், இங்கே சபைஸ்தாபகமான 25-ம்வருட வெள்ளியூபிலிவிழாவையும் அதிபத்திச் சிறப்புடன் கொண்டாடியது.

முந்தியமுத்தினங்களிலும் சபைக் கோவிலாகிய அர்ச். சூசையப்பரின் சிற்றாலயத்தில் திரிதின ஆராதனைகள் நடைபெற்றன. முதல்நாள் திங்கட்கிழமை பிற்பகல்5மணியளவில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பங்குகளிலுமிருந்து வந்துகுழுமிய சபைச்சகோதரர், சகோதரிகளின் சமுகத்திலே சபைக்கர்த்தர் வண. ஜோண்மேரி சுவாமியவர்கள்தலைமையில் மாதாந்த கூட்டம் விமரிசையாக நடந்தேறியது.

திருநாளன்றுகாலை 6-30மணிக்குப் பலவர்ண இயற்கைமலர்களாலும், அழகிய துவசங்களாலும் உள்ளும்புறமும்சிங்காரிக்கப்பெற்றுத் தேசோமயமாய்விளங்கிய சிற்றாலயத்தில் சபைச்சகோதரர்சகோதரிகள் தங்கள் சபை உடை அணிந்து சமுகமாக யூபிலித்தோத்திர பாடற்பூசை சுவாமியவர்களால் நிறைவேறியது. சகலரும் திருவிருந்தருந்திக் கடந்த25வருடங்களிலும் சபைமூலம் சர்வேசுரன் தங்களுக்கருளிய இகபர நன்மைகளுக்காக நன்றித்துதிசெலுத்தினர். பூசைமுடிவில்சுவாமியவர்களால் பொதுப்பாவமன்னிப்புப் பலன் அருளப்பட்டது.

காலைச் சிற்றுண்டிஉபசாரணை சிற்றாலயமைதானத்தில் நடைபெற்றது. வண. சபைக்கர்த்தர் சுவாமியவர்களும், வண. பி. நீக்கலஸ்சுவாமியவர்களும் சமுகமாயிருந்தனர். அவ்வமையம் சபைக்காரியதரிசி சகோதரன் எஸ். ஏ. எற்வேட்அவர்கள் "சபையார் உத்தமர்களாய்ச் சீவிப்பதற்கும், அவர்கள் மூலம் சருவேசுரனுடைய மகிமை விளங்குவதற்குமாகக் கடந்த25வருடங்களிலும் அருளப்பெற்ற வரப்பிரசாதங்களுக்காக முந்தத்தேவனுக்கு நன்றிகூறினர். சபையை யாழ்ப்பாணத்தில்அடியிட்ட வண. ஈ. குருசோபிறதருக்கும், கடந்தகாலங்களில் அதைப்பரிபாலித்த சபைக்கர்த்தர்கட்கும், தற்போது சபைக் கர்த்தராயிருந்து கண்ணை இமை காப்பதுபோல் அதனைக்காத்துவருகிறவரான வண. ஜோண்மேரி சுவாமியவர்கட்கும் நன்றிசாற்றினார். ஆரம்பத்திலேயே சபையிற்சேர்ந்து இப்பொழுது யூபிலிகொண்டாடும் சகோதரர்க்கு வாழ்த்துக்கூறினர். சகோதரன்ஜெரோம்அவர்களும் பேசினர்.

உபதலைவர் சகோதரன் ஏ. பி. முத்தையாஅவர்கள் பேசியபோது: வண. குருசோபிறதர் சபையைஆரம்பித்த விதத்தையும், அதுபடிப்படியாக வளர்ச்சியுற்றமுறையையும் சரித்திரத் தொடர்புடன் எடுத்துக்கூறினார். சபைத்தலைவர் ஏ. எஸ். பிரான்சீஸ் அவ்மேரிஅவர்கள் சபைக்குப்பேருதவியாயிருக்கும் சபைக்கர்த்தர் அவர்கட்கும், தம்மோடு ஒத்துழைத்துவரும் சபைச்சகோதரர்க்கும் நன்றிதெரிவித்தனர். "சபையார் தேவசித்தத்திற்குத் தங்கள்சித்தத்தையும் தாழ்த்திக் குறித்தநேரத்தில் செய்யவேண்டிய கடமைகளைச்செய்து பரிசுத்ததனத்தில் வளர்ந்து உத்தமராகவேண்டும்" என்று சபைக்கர்த்தர் சுவாமியவர்கள்கூறினர். மேலும் வண. குருசோபிறதருக்கு நன்றிகாட்டுமுகமாக அவரதுகல்லறையைச் சந்திக்கும்படிகூறி ஆசிஅளித்தனர்.

பிற்பகல்4மணியளவில் அர்ச். பிரான்சீஸ்குவின் கிரீடச்செபமாலை சொல்லப்பட்டபின் அவரின்திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச்செல்லப்பட்டுத் திரும்பவும் கோவிலைஅடைந்ததும் ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் வண. எல். ஜே. அகஸ்ரீன்சுவாமியவர்கள் "தேவபிரசன்னத்தில் சீவித்தல்" என்பதைப் பீடிகையாகக்கொண்டு பழைய,புதியஏற்பாட்டு ஆதாரங்களுடனும், அர்ச்சியசிட்டர்களது சரித்திர சம்பவங்களுடனும் அரியதோர்பிரசங்கம் செய்தார். பின்னர் சபைக்கர்த்தர் சுவாமியவர்கள் பரிசுத்தபாப்பாண்டவரின் ஆசீர்வாதமருளினர். ஈற்றில் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. மறுநாள் மாணித்தஅங்கத்தினரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக நிறைவேறிய திவ்வியபூசைப்பலியுடன் யூபிலிவிழா இனிதுநிறைவேறியது.

சகோதரர் ஜெரோம்அவர்கள் பேசியதின்சாரம் வருமாறு: இன்றுநாம் எமதுசபையின் 25-ம்ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி ஆனந்திக்கின்றோம். இதற்குக்காரணகர்த்தா வண. குருசோபிறதர் மாத்திரமென்று எண்ணுவோமானால் எமது மனப்பான்மை குறுகியதாயிருக்கும். ஏனெனில், ஒல்லாந்தர்காலத்திலே எமதுமுன்னோர் சுபீட்சமற்றிருந்தபோதும், வேதகலாபனையின்போது கொண்டிருந்த வீரத்துவமான வேதவிசுவாசபலம் இன்றுவரை எம்மைப் பிரமாணிக்கத்துடன் வாழும்தகைமையை அளித்திருக்கின்றது. ஆயின் எமதுஆன்மநரம்புகளிலூறிய அவர்களது விசுவாச இரத்தோட்டம் எமதுபின்சந்ததியாரிலும் உறுதிகொண்டிருக்கச்செய்ய வேண்டுமென்பதே இப்போதுள்ள பிரச்சினையாகும். எமதுபச்சிளம்குழந்தைகளின் கத்தோலிக்ககல்வியென்னும் பிள்ளைப்பால் அரசியல் கல்வித்திட்டமென்னும் போச்சியிலூற்றிப் பருக்கப்பட விருக்கின்றது. அதனால்கத்தோலிக்க பெற்றோராகிய நாம் கவலையற்றிருக்க முடியுமா? கத்தோலிக்கசூழலிலன்றிக் கத்தோலிக்கபண்பாடு விருத்தியடையாதுஎன்பதை ஆழ்ந்துயோசிக்கவேண்டும். வகுக்கப்படாத திட்டத்தின்கீழ்ப்படிக்க எம்குழந்தைகளை அனுப்பிவிட்டு நாம்வாழாவிருக்க மனம்ஒருப்படுமா? கத்தோலிக்கராகியநாம் எமதுகுழந்தைகளின் சமயக் கல்விக்கு அணைகட்டவேண்டும்.

எஸ். ஏ. எற்வேட்
காரியதரிசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னமலரின் அன்னை தந்தையர்

(முன்தொடர்ச்சி)

**7. தொடர்ந்துவந்த இன்னல்கள் :**

இன்பகரமாகக் கழிந்துகொண்டிருந்த மாட்டினின் இல்வாழ்வில் இன்னல்களின்சாயல் படரவாரம்பித்தது. 1864-ம் ஆண்டு ஷீலி ஒருலிகிதத்தில் குறிப்பிடுகிறாள் : "சின்னலியோனி பலக்குறைவுடன் காணப்படுகின்றாள். அக்குழந்தைக்கு நோய் எதுவுமில்லை. ஆயின், நடக்கமுடியாதவாறு பலவீனமுற்றிருக்கின்றாள். ஒட்டிஉலர்ந்த தேகத்துடனும், வெளுத்ததோற்றத்துடனும் காணப்படுகின்றாள். அவயவங்கள் சதைப்பிடிப்பின்றி எலும்புந்தோலுமாகத் தோற்றுகின்றன."

லியோனி பின்னர் எக்சிமாநோயினால் பீடிக்கப்பட்டாள். அது அவளது உடலெங்கும் பரவியது. பதினறு மாதங்களாக அச்சிறுமி மரணத்துடன் போராடினாள். மாட்டினின்குடும்பம் துயரத்திலாழ்ந்தது. எல்லாம்வல்ல இறைவனில் பாரம்முழுவதையும் ஒப்படைத்து வேண்டுதல்களால் ஆறுதலடைந்தது அக்குடும்பம். ஷீலி கண்ணீரும் கம்பலையுமாகக் கர்த்தரின்சந்நிதியில் தவங்கிடந்தாள். ஆண்டவரே, அவள் ஒருநாள் ஒருஅர்ச்சியசிட்டவளாக வரக்கூடுமானல் அவளைக்குணப்படுத்துமென அல்லும்பகலும் அனவரதமும் அவரைப்பிரார்த்தித்தாள். சீஸ்நகர மரியன்னையின் திருசேத்திரத்துக்கு மாட்டீன் கால்நடையாக ஒருயாத்திரைசெய்தார். பின்னர் அர்ச். மாகிறெற்மரியம்மாளை நோக்கி நவநாளொன்றுசெய்யப்பட்டது. அதன்முடிவில் லியோனி அற்புதமாகக் குணமடைந்தாள். எழுந்து நடமாடவும் ஆரம்பித்தாள்.

தினசரி மாலைவேளைகளில் தங்கள் அன்னையின் ஆலோசனைக்கிணங்க மாட்டீன்சிறுமிகள் மரியன்னையின் மணுளராம் சூசைமாதவனின் பீடத்தண்டையில் முழந்தாட்படியிட்டுக் கரங்குவித்துத் தங்கட்கோர் சின்னச்சகோதரனைக் கட்டளையிடவேண்டுமென வேண்டிக்கொள்ள ஆரம்பித்தனர். அச்சோதரன் ஒருநாள்குருவாகி அந்நியநாடுகளில் வேதபோதகராகச் செல்லவேண்டுமென்ற தங்கள் பெற்ரோரின் ஆவலையும் அச்சிறுமிகள் கருத்திற்கொண்டிருந்தனர். அம்மாதவனும் இச்சிறுமிகளின்மன்ருட்டைக் கேட்டருளினர். 1866-ம் ஆண்டு புரட்டாதித்திங்கள் இருபதாம்நாள் சின்னயோசெவ் இவ்வுலகவாழ்வை ஆரம்பித்தான்.

ஷீலி இதனாலடைந்த மகிழ்ச்சி அளவிடற்கரியது. அவளின்வாழ்க்கையை இன்று பலகோணங்களிலிருந்து தத்ரூபமாகக்காட்டும் அவளின்கடிதங்களிலொன்று இதனைவெளிப்படுத்துகின்றது. "ஆ, என்சிறுவன் எவ்வளவு அழகானவன். என்பையன் திடகாத்திரத்துடன் காணப்படுகிறான். இதிலும் பார்க்க அதிகமாக யான்எதிர்பார்க்க முடியாது. அவனை அதிகமாக நேசிக்கிறேன். என் எதிர்காலம் ஒளியுள்ளதாகவிருக்கும்."

ஆயின், குழந்தையோசெவ் இவ்வுலகில் ஆறுமாதங்கட்குமட்டுமே வசிக்க முடிந்தது. 1867-ம்ஆண்டு மாசி பதினலாந்தேதி வேதனைமிகுந்த அவ்வன்னை தன்புதல்வனை மீண்டும் இறைவனுக்களித்தாள். ஆயின், இன்னமும் ஷீலியின் மனதில் புதுவேதநாடுகளில் கர்த்தரின் திருவேதத்தைப் போதிக்கும் ஒருகுருபுதல்வனின்எண்ணம் மங்கிப்போகவில்லை. சிலமாதங்களின்பின்னர் மீண்டும் ஒருபுதல்வன் அவதரித்தான். அவனும் சூசைமாதவனின் பாதுகாவலில் ஒப்படைக்கப்பட்டான்.

"அவன் பலமுள்ளவனுகக் காணப்படுகிறான். ஆயின், அவனைப்பெற்றெடுக்க யான் அனுபவித்தஇன்னல் சொல்லுந்தரமன்று. அந்தநான்குமணித்தியாலங்களும் மிகப்பயங்கரமான வேதனைகட்குள்ளானேன். உடனடியாக அவனுக்கு அவஸ்தைஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அதிகாலையில்மலரும் அழகானமலர்களைப்போல் என் யோசெவ் காணப்படுகின்றான். அவனின் மோகனப்புன்னகை எனது இன்னல்கள்அனைத்தையும் நொடிப்பொழுதில் மறக்கச்செய்யும் சக்திவாய்ந்தது. இறைவன் இச்சிறுவனை என்னிடம் விட்டுவைப்பாரெனப் பரிபூரணமாக நம்புகிறேன். எனதுதினசரி வேண்டுதல்கள் அனைத்தும் இக்கருத்தையே மையமாகக்கொண்டுள்ளன. ஆயின் இறுதியில் நடப்பது அவரது சித்தமே" எனத் தன் இரண்டாவது புதல்வனைப்பற்றி ஷீலி குறிப்பிடுகிருள்.

ஆயின், சின்னயோசெவின் உடல்நிலையில் நாளுக்குநாள் பலவீனம் அதிகரித்துத் தனதுமூந்தியசிறுவனின் நிலையை எண்ணிய ஷீலி பரிதாபத்துடன் இச்சிறுவனையும் பராமரித்தாள். அச்சிறுவன்வாழ்வு குறுகத்தொடங்கியதுகண்டு அவளதுதைரியமும் பலவீனமுறத்தொடங்கியது. 1868-ம் ஆண்டு ஆவணி24முழுஇரவிலும் துன்பமனுபவித்தபின் அதிகாலை ஏழுமணிக்கு எனதுமடியில்கிடந்த என்திரவியத்தைக் கர்த்தர் எடுத்துக்கொண்டார். அப்போது என்கூட எவருமிலர்...... அடக்கச்சடங்குகட்கான நேரமும் அண்மியது. என்நேத்திரங்களிலிருந்து கண்ணீர்வெள்ளம் அருவியாயோட, நடுங்கும்கரங்களால் நான் பெற்ற செல்வத்தைத்தூக்கிப் பேழையுள்வைத்தேன். வெள்ளைரோசாமலர் வளையமொன்றினல் தலையை அலங்கரித்தபின் என்செல்வனைக் கடைசிமுறையாக உற்றுநோக்கினேன். ஆ, தேவனே இந்தஅழகோவியத்தையா மண்ணில்புதைக்கச் சொல்லுகிறீர் எனக் கதறினேன். பின்னர்என்னையே தேற்றிக்கொண்டவளாக ஆம், அது உமதுவிருப்பம்; உமதுசித்தம் எங்கள் பாக்கியம்எனப் பிரலாபத்துடன் கூறினேன்" எனத் தன் இரண்டாவது புதல்வனின் மரணத்தைப்பற்றிக் குறிப்பிடுகிருள் ஷீலி.

இவ்விருமரணங்களும் மாட்டீன்தம்பதிகளை இறைவனுக் கண்மையில் கொணர்ந்தன. இரண்டு மழலைச்செல்வங்களைப் பறிகொடுத்த அந்தத் துர்ப்பாக்கியவதி தன்தோழிக்கெழுதுகிருள். "நான் இன்னமும் நம்பிக்கையை இழக்கவில்லை. மேலும் இறைவன் எனக்குச் சில குழந்தைகளைத் தருவார்" என் எண்ணுகிறேன்.

1865-ம் ஆண்டு ஐப்பசியின் ஆரம்பத்தில் மரியாவும், பொலீனும் லிமான்ஸ் என்னுமிடத்திலுள்ள மினவுதற்சபைக் கன்னியர்நிவாசத்தில் உட்பிள்ளைகளாகக் கல்விபயில அனுப்பப்பட்டனர். 1819-ம் ஆண்டு ஆடி 2-ந் தேதி மரியா முதல்நன்மை பெற்றாள். அதுபற்றி ஷீலி குறிப்பிடுகிருள். "மரியா புதுநன்மை பெறுவதற்குச் செய்த ஆயத்தங்களோ அளவற்றவை. ஞானோபதேசத்தில் அவள் காட்டிய திறமைக்காக விசேஷபரிசுகள் அவளுக்கு அளிக்கப்பட்டன. பீடத்தடியில் முழந்தாளிட்ட என்செல்வி ஒரு புனிதவதிபோற் காட்சியளித்தாள். நான் லிமான்ஸில் மரியாவின் முதல் நன்மைக்காகக் கழித்த இருதினங்களும் என் வாழ்விலேயே குறிப்பிடத்தக்கவை.

(தொடரும்)

# தாம் ஓர் கிறீஸ்துவர்தானு?

(முன்தொடர்ச்சி)

அந்திப்பொழுதாகிச் செவ்வானம் மங்கியது. செங்கதிரோன் மேல்கடலில் மறைந்து அஸ்தமனமாகியது. எங்கும் இருள் கௌவியது. ஆயினும் தீயஸ் பிரபுவின்மனையில் அதுவரை படைத்தலைவனே அன்றேல் பட்டாளவீரர்களோ எவருமே கால்வைக்கவில்லை. அதனால் மறுநாள்தான் தங்கள்புதல்வனை அழைத்துச்செல்ல அவர்கள் வருவார்களாக்குமென்று தந்தையும், தாயும் சிந்தித்துக்கொண்டு அமைதியாக அனறிரவைக்கழித்தனர். மிகுந்த பக்திவேகத்துடன் செபஞ்செய்தும், ஞானசல்லாபங்கள்நடத்தியும் மனேற்சாகபுட்டிச்சீமோனைமறுநாட்பயணத்துக்குச் சித்தஞ்செய்தனர். கடைசியாகமூவரும் இராப்போசனஞ்செய்துவிட்டுத் தங்கள்படுக்கைக்குச் சென்றனர். ஆனல, நெடுநேரமாகியும் பலவிதசிந்தனைகளாலே அவர்களுக்கு நித்திரைவரவில்லை.

சீமோன் சிறிதுவேளைபடுத்து உறங்கிப்பார்த்தான் உறக்கம் வந்தபாடில்லை. அப்போது முதனாள் தனதுபெற்ரோருடன் நடத்தியசம்பாஷணையில் திவ்வியயேசுவைச் சீமோன்பேதுரு மும்முறை மறுதலித்தசம்பவம் அவன்சிந்தனையில் வந்தது. அவனை நான்அறியேன்— நீங்கள் சொல்லுகிற அந்தமனிதனை அறியேனென்று அவர் மும்முறை ஆணையிட்டு மறுதலித்தார். உடனே சேவல் கூவிற்று. அப்பொழுது திவ்வியயேசு அவரைத் திருக்கண்ணோக்கிப் பார்த்தார் அவரும் சேவல்கூவுமுன் மும்முறை என்னை மறுதலிப்பாயென்று ஆண்டவர் சொல்லியிருந்த வாக்கியத்தை நினைத்துக்கொண்டு உடனேவெளியிற்புறப்பட்டுப்போய் அழத்தொடங்கினார்— மனங்கசிந்து அழுதார்என்றதைச் சிந்தித்தபோது திவ்வியயேசுவின் இரக்கத்தைநினைந்து அவன்உள்ளம் கசிந்தது. கண்கள் இரண்டும் கலங்கத்தொடங்கின.

சீமோன் இதைப்பற்றிச் சிந்தித்து மனங்கசிந்து உருகிக்கொண்டிருக்கையில், திவ்வியயேசு உயிர்த்தெழுந்தபின் மூன்ரும்விசையாகத் தம்முடைய சீஷர்களுக்குத் தரிசனையானபோது, சீமோன்பேதுருவைப் பார்த்து, யோவானின் குமாரனுன சீமோனே, இவர்களிலும் நீஎன்னை அதிகமாக நேசிக்கிருயோ என்றுகேட்க, அவர்: ஆம், ஆண்டவரே நான்உம்மை நேசிக்கிறேனென்று உமக்குத் தெரியுமேயென்று சொன்னதும்,

மறுபடியும்அவர், யோவானின் குமாரனுகிய சீமோனே, என்னை நேசிக்கிருயோ என்றுகேட்க, அவர் ஆம், ஆண்டவரே, நான்உம்மை நேசிக்கிறேனென்று உமக்குத் தெரியுமேயென்று மறுபடியும் சொன்னதும்,

மூன்ரும்முறையும் அவரைநோக்கி, யோவானின் குமாரனுகிய சீமோனே, என்னை நேசிக்கிருயோ என்றுகேட்க, அவர் மூன்ருந்தரம் அப்படித்தன்னைக் கேட்டபடியினலே சீமோன்பேதுரு விசனப்பட்டு, ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே; நான் உம்மை நேசிக்கிறேனென்று நீர் அறிவீரே என்று சொன்னதும் ஆகியவெல்லாம் அப்போது தன்ஞாபகத்தில்வரவே நேசக்கண்ணீர் அவன்கண்களிலிருந்துபுத்துக்கென்று வெளிவந்து கன்னங்கள் இரண்டாலும் வழிந்தோடியது.

ஈற்றில் பேதுருவானவரைப்போல் தானும் திவ்வியயேசுவின் நேசத்துக்காக— அவருடைய திருவேதத்திற்குச் சாட்சியாகத் தனது உயிரைத் தியாகஞ்செய்யும் பெரும்பாக்கியத்தைத் தானும் அடையப்போவதையிட்டுப் பெரிதும்அக்களித்தபடியே கண்ணயர்ந்து நித்திரைபோயினுன்.

மறுநாள்அதிகாலை. உதயதாரகை பளீர்பளீரென ஒளிவீசியபடியே உயர எழுந்துகொண்டிருந்தது. சேவல்கள் நாலாபுறமும் கூவின. பட்சிசாலங்கள் துயிலொழிந்து தங்கள் படுக்கைகளிலிருந்து இன்பகானங்கள் பாடியவண்ணம் அங்குமிங்குமாகப்பறந்தன. உதயசூரியனும் தனது பொற்கதிர்களைப் பரப்பிக்கொண்டு கீழ்த்திசையில் உதயமாயிற்று. வீதிகளிலே மக்களினதும், இரதங்களினதும் நடமாட்டம்தொடங்கியது. [illegible] பத்தினியும் [illegible] மைபோலக் கடவுளைக் கையெடுத்துக்கொண்டே படுக்கையைவிட்டெழுந்தனர். அன்று ஏதேது நிகழ்ந்தபோதிலும் தேவபராமரிக்கைக்குத் தங்களைக் கையளித்து அவர் திருவுளப்படியாகட்டுமென்ற திடசங்கல்பத்துடன் தங்கள்நாளாந்த கடமைகளில் ஈடுபடத்தொடங்கினர். பணியாளரும்வந்து சமையல்அறையிலும், குதிரைஇலாயத்திலும், மாளிகையிலும், பண்ணையிலுமாகத் தங்கள்பணிகளிலே கண்ணுங் கருத்துமாயிருந்தனர். மணி எட்டுஅடித்து இன்னும் பத்துநிமிடங்கள்செல்லவில்லை. மாளிகையின் வெளிவாயிலில் ஆரவாரமாயிருந்தது. பன்னிருபோர்வீரர் அணிவகுத்து நின்றனர். அவர்கள்முன்பாகப் படைத்தலைவன் உருவியவாளுடன் காட்சியளித்தான்.

(வளரும்)

## மஸ்கோவும் வெளிநாட்டு மாணவர்களும்

ஸ்ரான்லி ஏக்குல்லோ என்ற 27 வயதுடைய ஆபிரிக்கமாணவர் மேற்படிப்புக்காக மஸ்கோநகர் சென்றிருந்தார். ஆனல், அவர் அங்கு சர்வகலாசாலையிலிருந்து விலக்கப்பட்டார். காரணம், அவர் கம்யூனிஸ்த கொள்கைகளில் பயிற்சிபெற மறுத்தமையேயாகும். அதனல் அவர் ரூஷியாவைவிட்டு மிகுந்த சிரமத்துடன் லண்டனுக்கு விமானத்தில் சென்ருர். "மஸ்கோவிலே ஆபிரிக்கர் எவரும் அரசாங்கத்தின் கம்யூனிஸ்தகொள்கைகளை ஏற்று அதன்திட்டப்படி நடந்தால்மட்டுமே தெரிந்துகொள்ளப்படுகின்ருர்கள்; நானும், எனது நண்பர்களும் விஞ்ஞானம், இலக்கியம் போன்றவைகளை மட்டுமேகற்க விரும்பியதால் அங்கு எங்களை ஆதரிக்க எவருமிருக்கவில்லை" யென்று அவர் தெரிவித்திருக்கிருர். ரூஷியா தனது செலவிலே வெளிநாட்டு மாணவர்களைத் தங்கள் நாட்டிற்கு மேற்படிப்புக்கென்று அழைத்[illegible] நோக்கம், தங்கள் [illegible]களிலே அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கேயாகும்.

## பாரிய ஐரிஷ் குடும்பம்

சுதந்திர அயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டபிளின்நகரிலே திருமதி மாகிறெற் மோகியர் என்ற 51 வயதுடைய மாது சென்ற 10-ந் திகதியன்று தனது இருபதாவது குழந்தையைப் பெற்றெடுத்தாளெனச் செய்தி கிடைத்திருக்கிறது. இது ஓர் ஆண் குழந்தையாகும். இன்னும் இருபது குழந்தைகள் பெற்ருலும் தான் கவலைப்படப் போவதில்லையென்று அன்று தினம் அவள் கூறினளாம். இவள் சகோதரர், சகோதரிகளாய் 24பேரைக் கொண்ட ஒருகுடும்பத்தில் பிறந்தவள். இவளுடைய மூத்தமகளின் வயது 31. இந்தமகள் இப்போது பத்துப்பிள்ளைகளுக்குத்தாயாய் இருந்துவருகின்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐப்பசிமாதம்

**பொதுக்கருத்து:**— வேதகலாபனை வேளையில் பரிசுத்தகன்னிமரியாயின் மன்ருட்டினுல் வெல்லமுடியாத மனவலியை விசுவாசிகள் அடையும் படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:**— வேதபோதகநாடுகளில் உபதேசிமார்களின் தொகையும், தரமும் உயரும்படியாக மன்ருடிக்கொள்வது.

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

## சத்திய வேத

# பாதுகாவலன்

**1960-ம் ஆண்டு**
**ஐப்பசிமாதம் 20-ந் திகதி**

## “மிஷன் ஞாயிறு”

“மிஷன்ஞாயிறு”என அறியப்படுகின்ற விசுவாசப்பரப்புதல் ஞாயிறு வருடந்தோறும் வந்துகொண்டே போகின்றது. ஆனுல், பிறராத்தும இரட்சணிய ஆவலும், கிறீஸ்து இராசாவின் இராச்சியம் உலகமுழுவதும் தீவிரமாகப் பரக்கவேண்டுமென்ற தீராதஆசையுங்கொண்டுள்ள கத்தோலிக்க மக்களுக்கெல்லாம் வருடத்தில்வருகின்ற ஒவ்வொருஞாயிறுமே மிஷன் ஞாயிருக இருந்துவரும். ஏனெனில்,அவர்கள் தினமும் விசுவாசப்பரப்புதலுக்காக ஏதோ ஒரு செபமோ, தியாகமோ, வேறெதுவோசெய்யப் பின்தாழமாட்டார்கள். இந்தமாபெரும் அப்போஸ்தலிக்கதொண்டிலே தங்களால் ஆனதைச்செய்யப் பின்வாங்கமாட்டார்கள். பிறராத்துமஇரட்சணிய அலுவலில் ஈடுபடுவதே தங்கள்ஆத்துமத்தை இரட்சிக்கச் சிறந்தஉபாயம்என்பதை அவர்கள் நன்கறிவார்கள். அதனுல் மிஷன்ஞாயிறுவருவது அவர்களுக்கெல்லாம் வேதப்பரப்புதல் தொண்டிலே ஓர்மறுமலர்ச்சியை உண்டுபண்ணுவதாயிருக்கும்.

மிஷன்ஞாயிறன்று “உம்முடையஇராச்சியம் வருக; கிறீஸ்து இராசா வாழ்க”என்பது நம்முடையவிருதுவாக்கியமாக இருந்துவரவேண்டும். இதனை அடிப்படையாகக்கொண்டு அன்று தினம் விசுவாசப்பரப்புதலுக்காக விசேடசெபங்கள் செய்யவேண்டியது நமதுகடமையாகும். “அறுப்புமிகுதி; வேலையாட்களோ கொஞ்சம்பேர்; ஆகையால்தான் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுப்புக்குஎசமானை மன்ருடுங்கள்” என்ற திருவாக்கியங்களை நமது மனதில்கொண்டு நம்முடைய நாட்டில் குருமார், சந்நியாசர், கன்னியர்கள் விருத்தியடையும்படியாக மன்ருடிக்கொள்வது நமதுகடமையாகும். இன்னும் விசுவாசப்பரப்புதலுக்கென நாம் மனப்பூர்வமாக— மனத்தாராளமாகப் பணஉதவிசெய்யவேண்டும். இந்தஉதவியைச் செய்வதற்கு ஓர்இலகுவான உபாயம், எல்லோரும் விசுவாசப்பரப்புதல்சபையில் சேர்ந்துகொள்வதே. இந்தச்சபையிலே சேர்ந்து அதன்கடமைகளை அனுசரிப்பதால் செபஉதவியும், பொருளுதவியும் செய்கிறவர்களாவோம்.

நாம் விசுவாசமென்னும் பரமகொடையைப் பெற்றிருக்கிருேம். ஆனுல்,உலகமக்களில் மூன்றிலொருபகுதியினர் அதனை இன்னுமே அடைந்திலர். அவர்கள் அதைஅடையச்செய்வது நம்மேல் சுமந்தகடனுகும். “நீங்கள் உலகமுழுவதிலும்சென்று...எச்சிருட்டிக்கும் சுவிசேஷத்தைப் போதியுங்கள்”என்று நமதுஇரட்சாபெருமான் திருவாய்மலர்ந்து ஏறக்குறைய இரண்டாயிரம்வருடங்கள் ஆகின்றன. இது எம்மெல்லோருக்குமே அவர் விடுத்த கட்டளை.

அகிலமுழுவதிலுமுள்ள வேதபோதகநாடுகளிலே பல்லாயிரக்கணக்கான சுவிசேஷதொண்டர்கள் வேதத்தைப்போதித்து வருகின்றூர்கள். ஆனுல்,இவர்கள் தொட்டதெல்லாம் பொன்னுகும் வரத்தைப் பெற்றவர்கள்அல்ல. அவர்களின் சுவிசேஷபோதனைகளைக் கேட்டவர்களெல்லாம் கேட்டமாத்திரத்திலே மனந்திரும்பி ஞானஸ்நானம்பெற்றுத் திருச்சபையில்சேரும் வரத்தைப் பெற்றவர்களும்அல்ல. எத்தனையோநாள்தவங்கிடந்து, நெடுந்தூரம்நடந்து, அலைந்துலைந்து, அரும்பிரயாசப்பட்டுத்தான் வேதத்தைப் பரப்பிவருகின்றூர்கள். தங்கள்சீவனத்துக்கு— தங்களது அவசியதேவைகளுக்கு —பாடசாலைகளைத் திறப்பதற்கு— கோவில்களைக் கட்டுவதற்கு— ஏழைகளுக்குத் தானதருமம்செய்வதற்கு — நோயாளரைப் பராமரிப்பதற்கு — அநாதர்களைப் போஷிப்பதற்கு அவர்கள் யாரிடம்போவது? விசுவாசிகளாகிய நம்மிடமல்லாது வேறெவரிமுமன்று. ஆகவே, விசுவாசப்பரப்புதல்ஞாயிறு வரவிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே இவைகளையெல்லாம் சிந்தித்துப்பார்த்துக் கிறீஸ்துநாதர்பேரால்— பிறராத்தும இரட்சணியத்தின்பேரால் ஆனதெல்லாம்செய்ய ஆயத்தப்படுவோமாக!

### இலங்கைக்கு அமெரிக்ககோதுமை

2கோடியே 42லட்சம்ரூபாபெறுமதியான அமெரிக்ககோதுமைமாவைவாங்குவதற்கான ஒப்பந்தம்ஒன்றை அமெரிக்காவுடன் அரசாங்கம் செய்திருக்கிறது. இந்தமாவுக்கென்று இலங்கை கொடுக்கும்பணத்தை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கென்று அமெரிக்கா திரும்பக்கொடுத்துவிடும். இந்தக்கோதுமைமா விரைவிலே இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

### பி. ஏ. பரீட்சையில் சித்தியடைந்தவர்

இற்றைக்குப் பன்னிருவருடங்களின் முன் கொழும்புத்துறை ஆசிரியகலாசாலையிலிருந்து பயிற்சிபெற்று வெளியேறியவரும், இலங்கைச் சர்வகலாசாலையிலே தமிழில் டிப்புளோமா பெற்றுள்ளவரும், தற்போது மன்னார் [illegible] சேவியர் கல்லூரியில் ஆசிரியத்தொண்டாற்றுகிறவருமான வித்துவான் எஸ். சூசைப்பிள்ளை அவர்கள் லண்டன் சர்வகலாசாலையின் பி. ஏ. பரீட்சையிலே இரண்டாவதுபிரிவில் அரங்கேறியுள்ளாரென அறிகின்றேம். இவர் யாழ்ப்பாணம், பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் 13-ம் நோவினை மூப்பரான திரு. அ. சவிரிமுத்துஅவர்களின் சிரேஸ்டபுதல்வராவர்.

### லண்டன் பி. எஸ்சி பரீட்சை

இம்முறை லண்டன் சர்வகலாசாலையின் பி. எஸ்சி. பரீட்சைக்கு வெளிநாடுகளிலிருந்துபோன மாணவர்களில் இலங்கை மாணவர்களே — இவர்களிலும் தமிழ்மாணவர்களே ஆகக்கூடிய தொகையினராய் அரங்கேறியிருக்கின்றனர். வெளிநாடுகளில் அரங்கேறினேர் தொகைவருமாறு: மலாயா (பினங்) 1. மோல்த்தா 1. மோறிஷஸ் 4. றொடேஷியா 1. வாஷிங்ரன் 1. இலங்கை 38. சித்தியடைந்த இலங்கைமாணவர்கள் 38பேரிலும் 28பேர் தமிழர்கள்.

## திருமணத்
# தங்கயூபிலி விழா

யாழ்ப்பாணம்,பரிசுத்தஅடைக்கலநாயகியின் சரித்திரப்பெருமை வாய்ந்த திருஆலயமானது சென்ற 17-10-60 திங்களன்றுகாலை அப்புக்காத்து றெஜிஸ்இராசகாரியர் தம்பதிகளின் திருமண ஐம்பதாம்வருடநிறைவுத் தங்கயூபிலிவிழாவால் அளித்துநின்ற மனேகரகாட்சியின் மாட்சிமையோ வர்ணிக்குந்தரமன்று.

அழகிற்கழகு செய்தவாருய்த் தீபாலங்காரம், புஷ்பாலங்காரம் செய்யப்பெற்றுப் பலிபீடஸ்தானத்தில் அநேககுருப்பிரசாதிகள்சூழ்ந்திருக்க, தேசோமயமாய்விளங்கிய ஆலயத்திலே யூபிலிநாயகதம்பதிகளும், அவர்களின் பிள்ளைகளும், மருகர்மருகிகளும், பேரப்பிள்ளைகளும், பெருந்திரளான சுற்றத்தவர்களும், மற்றும் அன்பர்கள், அபிமானிகளும் சமுகமளித்திருக்க, யூபிலிநாயகர்களின் சிரேஷ்ட குருபுதல்வரான வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்கள் கனிஷ்டகுருபுதல்வரான வண. யோசெவ் இராசகாரியர் சுவாமியவர்களும், அவர்களின் சுற்றத்தவரான வண. பெனெற் கொன்ஸ்ரன்ரைன் சுவாமியவர்களும்துணைபுரிய,கோவிற்பாடகர்குழாமின் உதவியோடு யூபிலித்தோத்திர பாடற்பூசை நிறைவேற்றினர்.

சுவிசேஷத்தின்பின் மன்னர் விசாரணைப்பங்குக் குரவரும், மன்னர்— மாதோட்டப்பகுதி மூப்புச்சுவாமியாரும், யூபிலி நாயகர்களின் ஞானப்புதல்வருமான அதிவண. ஜீ. ரி. பாலசுந்தரம்சுவாமியர்கள் ஆங்கிலமொழியில்செய்த அரியபிரசங்கத்திலே கத்தோலிக்கதிருச்சபையில் கிறீஸ்தவகுடும்பம் வகித்திருக்கும் புனிதமும், பெருமையும் வாய்ந்த ஸ்தானத்தைப் பற்றிச் சிறப்பாக விளக்கிக்கூறினர். யூபிலிநாயகர்களின் குடும்பம் கிறீஸ்தவ குடும்பங்களுக்கு ஒருகலங்கரைவிளக்கம்போன்று விளங்கிவந்திருப்பதை இனிதே எடுத்துக்காட்டித் தேனே, பாலே, தெள்ளமுதோவென்று இன்பங்கொள்ளும்படியாகத் தமது பிரசங்கத்தைமுடித்து யூபிலிநாயகர்களுக்குச் சோபனமும்,ஆசியும் கூறி நின்றூர்.

பூசையின்போது விழாநாயகர்களும், அவர்களைச்சேர்ந்தோரும், மற்றும்அன்பர்களுமாகப்பெருந்தொகையானேர் திருவிருந்துப் பந்தியமர்ந்து சர்வேசுரனுக்கு நன்றியறிந்ததோத்திரநமஸ்காரம் செய்தார்கள். பூசைமுடிவில் “தெதேயும்” என்னும் தேவதோத்திரகீதம் பாடப்பட்டது. அதன்பின் யூபிலிநாயகர்கள் விசேஷஆசீர்வாதம் வழங்கப்பெற்றூர்கள்.

அதன்மேல் அங்கு சமுகமளித்திருந்த குருப்பிரசாதிகளும், சுற்றத்தவர்களும், மற்றும் பிரமுகர்களும், யூபிலிநாயகர்கள்சமேதராய் ஆலயத்தின்பக்கமாய் அலங்காரகோலமுற்று விளங்கிய அடைக்கலநாயகியின் கலாசாலைமண்டபத்திற்குச் செல்லவே, அங்கு சம்பிரமமான வரவேற்புஉபசாரம்ஒன்று இன்பகரமாக நடைபெறலாயிற்று. கேக்முதலாம் பணிகாரவகைகளாலும், குளிர்பானவகைகளாலும் பரிமளித்துக்கொண்டிருந்த அச்சுபதருணத்திலே,பரிமேலர்எஸ்.அருளானந்தம் அவர்களும், திரு. எஸ். எம். ஜே. லூயிஸ்அவர்களும், அடைக்கலநாயகிஆலய பங்குக்குரவர் வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளை சுவாமியவர்களும் முறையேஎழுந்து, பொன்மாரிபொழிந்தாற்போன்று நிகழ்த்திய சொற்பொழிவுகளிலே, யூபிலிநாயகர் ஸ்ரீமான் றெஜிஸ் இராசகாரியர்அவர்கள் யாழ்நகரிலே கத்தோலிக்க சேவைக்குச் சிறந்த ஒருமுன்னேடியாக இருந்துவருவதையும், கத்தோலிக்க பத்திரிகைகள், மற்றும் பிரசுரங்களை வீதிவீதியாக, வீடுவீடாகக்கொண்டு சென்று ஆர்வத்துடன் பரப்பிவருவதையும், மரியாயின்சேனையிலும், மற்றும் கத்தோலிக்க இயக்கங்களிலும் அவர் சிறப்பாகப் பணியாற்றிவருவதையும், பரிசுத்த அடைக்கலநாயகியின் புதியஆலய திருப்பணியிலே பங்குக்குருமாருக்கு வலதுகரம்போல் இருந்து எடுத்துவந்த அயராமுயற்சியையும், யூபிலிநாயகி அவரது இல்லத்தின் அரசியாயிருந்து தங்கள் பிள்ளைகளைத் தேவபக்தியிலும், கல்வியிலும், நல்லொழுக்கத்தில் சிறந்தோங்கும் படியாகச் சீராய்ச் சிறப்பாய் வளர்த்துவந்திருப்பதையும் யூபிலிநாயகர்களின் குடும்பமானது இருகுருப்பிரசாதிகள் உட்பட அருஞ்செல்வங்களாகிய பிள்ளைப் பாக்கியங்களாலும், அவர்களது பின்வழித்தோன்றல்களாலும் சிறப்படைந்து தேவனலே அது மிகவாக ஆசீர்வதிக்கப்பெற்றுத் தேவபக்திவைராக்கியமுடையதொன்ருய்த் திகழ்வதையும் பாராட்டிப் புகழ்மாலைசூட்டிச் சோபனமும், ஆசியும் கூறினூர்கள்.

ஈற்றில், யூபிலிநாயகர் எழுந்து, தமது உள்ளத்தெழுந்த உணர்ச்சிவெள்ளம் அணைகடந்துபாய —ஆனந்தக்கண்ணீர் பெருக்கெடுத்துப்பாய அளித்தபதிலிலே சர்வேசுரன் தமது குடும்பததின்மேல் மழைமாரியாகப் பொழிந்தருளிய அருட்பிரசாதங்களுக்காக இதயபூர்வமாய் நன்றித்துதிகூறினர். அதன்மேல் தங்களைக் கௌரவித்து அங்குசமுகமளித்ததற்காகவும், தங்களுக்கு அருளப்பெற்ற ஆடம்பரமான வரவேற்புஉபசாரத்திற்காகவும் அனைவர்க்கும் மனநிறைந்த நன்றித்துதிசாற்றினர். அன்றுபகல்முழுவதும் பல்வேறிடங்களிலுமிருந்து குரவர்களும், மற்றும் பிரமுகர்களும் திரளாகச் சென்று யாழ்நகரின் பெருந்தெருவிலுள்ள “ஆரிய லொட்ஜ்” எனும் இல்லஞ்சென்று யூபிலிநாயகர்களைச் சந்தித்துச் சோபனமும், ஆசியும்கூறித் திரும்பியவண்ணம் இருந்தார்கள்.

யூபிலிநாயகர்கள்
பல்லாண்டுவாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளைக் காக்க
# ஒன்றுபட்டு நிற்க

**"பல்வேறு இனம், மதத்தைச்சேர்ந்த எமதுநாட்டுப் பிள்ளைகளுக்கேற்ற கல்விமுறைபற்றிக் கல்விமந்திரி ஜனுப் பதியுத்தீன் மஹ்மூத்துக்கு என்ன தெரியும்? பிள்ளைகள் நற்பிரசைகளாக இருப்பதற்கு மதஅடிப்படையில் அவர்களுக்குக் கல்விபுகட்ட வேண்டியது அவசியமாகும்"**

பாடசாலைகளை எடுப்பதை எதிர்க்குமுகமாகச் சென்றசனிக்கிழமை நீர்கொழும்பு மேரிஸ் ஸ்ரெல்லா கல்லூரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் முன்னைநாள் கல்விமந்திரி திரு. டபிள்யு. தஹநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது; மக்களால் தெரிவுசெய்யப்படாதவரான ஜனுப் பதியுத்தீன் மஹ்மூத்தைப் பிரதமர் கல்விமந்திரியாக நியமித்துள்ளார். சிறிமா அரசாங்கத்தைச் சேர்ந்த கல்விமந்திரியின் செயலானது 1958-ம் ஆண்டில் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்தையும், ஏனைய தமிழரசுக் கட்சியினரையும் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா தடுப்புக்காவலில் வைத்ததை ஒத்ததாகும். எமது சமயத்தைப் பாதுகாக்கவும், எமது பிள்ளைகளின் நலன்களைப் பாதுகாக்கவும் எம்மாலானவற்றை நாங்கள் செய்யவேண்டும். சிங்கள கலாசாரம்பற்றி ஜனுப் பதியுத்தீன் மஹ்மூத்திற்கு ஏதாவது தெரியுமாவென்று எனக்குத்தெரியாது.

பாடசாலைகளை எடுக்கும் அரசாங்கத்தின் முடிவை எதிர்ப்பதற்குப் பல்வேறு இனத்தையும் மதத்தையும் சேர்ந்தவர்கள் ஒன்றுசேர்ந்துபோராட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## ஸ்ரீமதி. லூயிசாப்பிள்ளை யோசேப்பு அவர்களின்
# தேகவியோகம்

யாழ்ப்பாணத்திலே பிரபல சுருட்டு முதலாளியாக விளங்கியிருந்தவரும், "அ. யோ" என்று பிரஸ்தாபமாக அறியப்பெற்று வந்தவருமான ஸ்ரீ அவுரும்பிள்ளை யோசேப்பு அவர்களின் பாரியாரான ஸ்ரீமதி லூயிசாப்பிள்ளை அவர்கள் விருத்தாப்பிய நோய் கண்டிருந்து சென்ற 7-10-60 வெள்ளிக்கிழமை சுண்டிக்குளி, "சோமசுந்தரம் அவெனியு" விலுள்ள தமது புத்திரியின் இல்லத்தில் காலம்சென்ற துயரசெய்தியானது பலருக்குமே கவலைதருவதாயிற்று. மரிக்கும்போது இவவுக்கு வயது 76.

இவர் ஒருகாலம் யாழ்ப்பாணம், பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவில் எட்டாம் நோவனை மூப்பராயிருந்த திரு. ஏ ஜேக்கப் அவர்களின் சிரேஷ்ட புத்திரியாவர். அக்காலத்திலே ரோமாபுரியில் குருப்பட்டம்பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணத்து முதற்குருப்பிரசாதிகளில் ஒருவரும், தற்போது சிலாப மேற்றிராசனத்தைச் சேர்ந்த போளவத்தையிலே அடக்கஞ் செய்யப் பெற்றிருப்பவருமான வண. சேவியர் பிரான்சீஸ்குஸ் சுவாமியாருக்குப் பிட்டப்பிள்ளை முறையானவர். யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே 32 வருடங்களாய்ப் பெரும்புகழ்ச்சிக்குரிய விதமாய்த் திருத்தொண்டாற்றி வந்து இற்றைக்குச் சுமார்20வருடங்களின் முன் காலஞ்சென்ற வண. ஜே. பிரான்சீஸ்சுவாமியவர்களின் உடன்பிறந்த சகோதரியாவர்.

இல்லறவாழ்க்கையிலே ஈடுபட்டபின் இவர் பத்தாவுக்கேற்ற தர்மபத்தினியாகவிளங்கியிருந்து, இல்லாச்சிரமம் இனிதே நடத்திவந்து, தேவபக்தி, வேதானுசாரத்தாலும் தயைதாட்சண்யம், அன்பாதரவு, இன்சொல் ஆதியாம் சீரியகுணங்களாலும் எவர்க்குமே இன்பாய்நடந்து, நன்மக்கட்பேறு பெற்று நீரோசையாகவாழ்ந்திருந்தார். யாழ்ப்பாண நகரசபையின் முன்னுள் அங்கத்தவர் திரு. ஏ. ஜே. சுவாம்பிள்ளை, மருதமடுத் திருப்பதிப்பரிபாலர் வண. ஜே. சி. செல்வரத்தினம் சுவாமியவர்கள், திருவாளர்கள் ஏ. ஜே. பெனடிக்ற், ஏ. ஜே. சேவியர், திருமதி மேரி ஆன் ஸ்ரனிஸ்லோஸ், திருமதி நவமணி செபஸ்ரியாம்பிள்ளை என்பவர்கள் இவவின் புத்திரர், புத்திரிகள்.

மறுநாள்சாயந்திரம் இவவின் பூதவுடல் அழகியபேழையில் வைக்கப்பெற்று இனசனர், நன்மரணயத்த சபையினர், மற்றும் பிரமுகர்கள் பெருந்திரளாகச் சமுகமளித்திருக்க, முப்பது குருப்பிரசாதிகள் சமேதராய் இவரின்குருமகனர் வீட்டிலும், ஆசனக்கோவிலிலும், சேமக்காலையிலும் துக்கசங்கீதங்கள்பாடி அந்திம திருச்சடங்குகள் நிறைவேற்றிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்க அடக்கம் சிறப்பாக நடந்தேறியது. இவவை இழந்து துன்புறும் புத்திரர், புத்திரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றுமுள்ள இனசனரோடு நாமும் அனுதாபப்படுகிறோம்.

R. I. P.

## கடலின் அடியில் காணும் உலகம்

நீலத் திரைகடலுக்கு அடியிலே மறைந்துகிடக்கும் மர்ம உலகமானது மனிதன் இதுவரை காணுத புதுமையும், சிறப்பும் மிக்க உலகமாக இருக்கலாம். ஆழ்கடலுக்கு அடியில்சென்று அங்கு படங்களையும், கடலின் அடித்தளம்பற்றிய தகவல்களையும் சேகரித்துக்கொண்டு வரக்கூடிய புதிய கருவியொன்று அண்மையிலே அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ளது. "ஆழ்கடற் கருவி" என அழைக்கப்படும் இந்தச்சாதனம் வாரக்கணக்கிலே கடலின் அடித்தளத்திலிருந்து காந்தசக்தி, மின்-சக்தி, கதிரியக்கம் பற்றிய பல தகவல்களைச் சேகரிக்கக்கூடியது. அமெரிக்க கடற்படைப் பகுதி உருவாக்கிய இக்கருவி விஞ்ஞானிகள் ஆழ்கடல் ஆராய்ச்சி நடத்தத்தக்கதாய்ச் சமுத்திரத்திலே எவ்விடங்களில் நீரோட்டம், சுழிகள் ஏற்படுகின்றன என்பதுபற்றிய தகவல்களைக் கொடுக்கும். இந்தப் புதியகருவி 30 அங்குல விட்டமுள்ள ஒரு கோளம் போல அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நங்கூரத்தின் உதவியுடன் கடலின் அடித்தளத்திற்கு அனுப்பப்படுகிறது. குறித்தநேரத்தில் ஆராய்ச்சிக்கான சகலதகவல்களும் சேகரிக்கப்பட்டதும் அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் காந்தசக்தியினுல் இயங்கும் மணிக்கூட்டிலிருந்து வெளிக்கிளம்பும் விசையினுல் கோளம் நங்கூரத்திலிருந்து விடுவிக்கப்படும். கோளத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மிதக்கும் பை இதனை நீர்மட்டத்திற்கு மிதத்திவரும். அந்நேரத்தில் றேடியோக் கருவிகள் அண்மையிலுள்ள தகவல்பெறும் நிலையங்களுக்குச் சமிக்ஞைகள்மூலம் கடலில் கோளம் மிதக்கும் இடத்தைக் குறிப்பிடும். ஆராய்ச்சியாளர் உடனடியாகக் குறிக்கப்பட்ட இடத்துக்கு விரைந்துசென்று கோளத்தைத் திரும்பப்பெறுவார்கள். கடலின் அடிமட்டத்திலே பல இடங்களில் இரும்பு, செம்பு, மக்னீஸ், கோபால்ட் முதலிய லோகங்கள் பெருவாரியாக உள்ளன. இவற்றை எடுத்து விற்பனை செய்ய இயலுமாஞல் பெரும்பயன் விளையும். விஞ்ஞானிகள் கடற்தரையை ஆராய விரும்புவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

—அமெரிக்கசெய்தி

---

உதவிபெறும் பாடசாலைகளை
அரசாங்கம் கைப்பற்றவிருக்கும் திட்டத்தை
எதிர்க்குமுகமாக

## வடஇலங்கைக் கத்தோலிக்க தொழிலாளர் ஆதரவில்
# ஒரு மாபெரும் கூட்டம்!

இக்கூட்டத்திலே
பல அறிஞர்களும், பெரியோர்களும்
இத்திட்டத்தை ஆராய்ந்து, ஆட்சேபித்து
விளக்கிப் பேசுவார்கள்.

இக்கூட்டம்
குருநகர், சனசமூக நிலைய மைதானத்தில்
அடுத்த ஞாயிறுவாரம் (23-10-60)
பிற்பகல் 6 மணிக்கு
நடைபெறும்.

---

## சந்தியாகப்பரின் கல்லறைநகரம்

59,000 மக்களைக்கொண்ட சந்தியாகோ தெ கம்பொஸ்தெல்லா என்ற புராதனநகரம் ஸ்பெயினின் வடமேற்குப்பகுதியிலே மலைகளின் மத்தியில் அமைந்துள்ளது. இங்குதான் அர்ச். சந்தியாகப்பரின் கல்லறை இருக்கின்றது. ஓர் அதிமேற்றிராசன நகராகவும், சர்வகலாசாலை நகராகவுமுள்ள இது கலிஸியாநாட்டின் அரசியல், சமய, கல்வி, சித்திரக்கலை ஆதியவற்றின் தலைநகராய் விளங்குகின்றது. 9-ம் நூற்றுண்டின் ஆரம்பத்திலே அப்போஸ்தலரான சந்தியாகப்பரின் கல்லறை சந்தியாகோநகரில் கண்டறியப்பட்டபோது பெருந்தொகையான யாத்திரிகர்களை ஈர்த்துகொள்ளலாயிற்று. ஸ்பானியதேசத்துக்குச் சுவிசேஷத்தைக் கொண்டுசென்றவர் இந்த அர்ச்சியசிட்டவரே. அப்போது அவருடைய கல்லறையின்மேலாக இரண்டாவது அல்போன்ஸோஅரசர் ஒருகோவிலைக் கட்டியெழுப்பினர். இந்தக் கோவிலினதும், பிந்த மூன்றுவது அல்போன்ஸோஅரசரால் கட்டியெழுப்பப்பட்ட மகாதேவாலயத்தினதும் எஞ்சியுள்ள பகுதிகள் தற்போதைய ஆசனக்கோவிலின்கீழ் இன்றுமே இருந்துவருகின்றன.

## சுதந்திர உலகம்கண்ட மாலுமி

ஐக்கியநாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு ரூஷிய பிரதமர் குருஷேவையும், அவர் சகாக்களையும் நியூயோக்நகர் கொண்டுபோய்ச் சேர்த்த பால்திகா என்ற சோவியற் கப்பலில் ஒருமாலுமியான விக்ரர் ஜானிமட்ஸ் என்பவர் சென்ற 13-ந் திகதியன்று அக்கப்பலிலிருந்து தப்பியோடி அமெரிக்காவில் தஞ்சமடைந்திருக்கின்றர். தனக்குத் தஞ்சமளிக்க வேண்டுமென்று இவர் செய்துகொண்ட மனுவை அமெரிக்க அரசாங்கம் ஏற்று அடைக்கலம் அளித்துள்ளது. இவர் "அமெரிக்கன்" என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டிஒன்றில் தெரிவித்தது வருமாறு: குருஷேவ்என்றாலே எனக்குப் போதுமென்றுகிவிட்டது. அவன் ஒருகொடுங்கோலன். நான் அமெரிக்காவில் ஒருசிலநாட்களே தங்கியிருந்தபோதிலும் சோவியற் ரூஷியாவில் அமெரிக்காவைப்பற்றிச் செய்யப்பட்டுவரும் பிரசாரமெல்லாம் எவ்வளவு உண்மைக்கு மாறுனது என்பதை உணர்ந்துகொண்டேன். பால்திகா கப்பலின் மாலுமிகளிலே பாதிக்கு அதிகமானேர் வாய்ப்புக் கிடைத்தால் கப்பலைவிட்டுவெளியேறித் தப்பியோட விரும்புவார்கள். சுதந்திரம் பெற எனக்குக்கிடைத்த இந்தவாய்ப்பு ஓர் அதிர்ஷ்டமாகும். சோவியற் ரூஷியாவில் அடக்குமுறையும், ஏற்றுக்கேட்பதுமே முக்கிய இடம் பெறுகின்றன. எனது நாடான எஸ்தோனியாவும், லாத்வியா, லிதுவேனியா நாடுகளும் சோவியற் அடக்குமுறை ஆட்சியால் நசுக்கப்பட்டிருக்கின்றன. மூன்று நாடுகளையும் சேர்ந்த மக்கள் குருஷேவை வெறுக்கின்றுர்கள். குருஷேவ் ஒரு பொய்யன். ஹிற்லரைப் போன்றவன். அதிகார மமதையால் தலைகால் தெரியாது நடந்துகொள்ளுகிறுன். எனது குடும்பத்தையும், என் தாயாரையும், எனது மூன்றுசகோதரிகளையும் விட்டுப்பிரியத்தானும் நான் துணிந்ததிலிருந்து சுதந்திரமற்ற சோவியற்நாட்டு வாழ்க்கையிலே எனக்கு ஏற்பட்டுள்ள கசப்பை நீங்கள் உணரலாம். எனதுபந்துக்களைச் சோவியற்அரசாங்கம் துன்புறுத்தியே தீரும். என்றாலும் எனது சுதந்திர வேட்கை அவர்களுக்கு வரப்போகும் துன்பத்தைத்தானும் பொருட்படுத்தவில்லை.

## வதிரி அர்ச். தெரேசம்மாள்
# திருநாள்

அன்று 6-10-60 வியாழக்கிழமை. நீலவானம் பொழுதுசாய்வது காரணமாகப் பற்பல வர்ணசாலங்களுடன் காட்சியளித்தது. மங்கிவரும் கதிரவனைக்கண்டு பொங்கி எழுந்தது பூரணசந்திரன். அர்ச். அந்தோனியார் ஆலயத்திலே அர்ச். தெரேசம்மாள் அழகான டெய்சிப் புஷ்பங்களால் அலங்கரித்துத் தீபாலங்காரம் செய்யப்பட்டிருந்த அழகிய பீடத்தில் எழுந்தருளியிருந்தாள். மணிகள் ஆர்ப்பரிக்க மக்கள் ஆலயத்தைநோக்கிச் சரிந்துகொண்டிருந்தார்கள்.

நோவனைகள் செபமாலையுடன் ஆரம்பமாயின. பாடசாலை மாணவிகளால் கீதங்கள் இனிமையாகப் படிக்கப்பட்டன. வண. கருணைகரர் சுவாமியவர்கள் ஆசீர்வாதம் அருளினர் 8-ந் திகதி சனிக்கிழமை மாலை வேஸ்பர் பாடி ஆசீர்வாதம் அருளப்பட்டது.

மறுநாள் 9-10-60 ஞாயிறுவாரம் காலைக்கதிரவனின் பொற்கதிர்கள் உலகிற்கு ஒளிபரப்ப, மணிகள் ஆர்ப்பரிக்க, மக்கள் திரளாகச் சமுகமளித்திருக்க அழகாக அலங்கரித்திருந்த பலிபீடத்திலே பங்குக்குரவர் 7-30 மணிக்குத் திருநாட் பாடற்பூசையை ஆரம்பித்து, அர்ச். தெரேசம்மாளின்சீவியவரலாறு பற்றி அருமையான ஓர்பிரசங்கம் செய்தார்.

அர்ச். சின்னமலர்அம்மாள் ஒரு நவமான வழிகாட்டும் தாரகை, மிஷன் நாடுகளின் பாதுகாவலாளி. சிறியோரும், பெரியோரும், படித்தோரும், பாமரரும் பின்பற்றக்கூடிய சிறியவழியைப் படிப்பித்துத் தேவன்பக்கம் ஆன்மாக்களைச் சேர்க்கும்பாதையை உலகிற்குக் காட்டிய உத்தம கார்மேல் மடக் கன்னிகை. இவள்காட்டும் புனித பாதையில் நடந்து நாமும் வான்கரை சேர அடியெடுத்து வைப்போமாக.

மேரிதிரேஸ் சாமிநாதர்,
வதிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே !

## இதுவே நேரம்

“நீதியின் நிமித்தம் உபத்திரவப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் மோட்சஇராட்சியம் அவர்களுடையது” என்று எமது இரட்சகர் செப்பிய வார்த்தைகளை நினைவுகூரவேண்டிய நேரம்வந்திருக்கிறது.

“என்னைப்பற்றி மனிதர் உங்களைச் சபித்துத் துன்பப்படுத்தி, உங்கள்மேல் சகலதின்மைகளையும் அபாண்டமாய்ச் சொல்லும்போது நீங்கள் பாக்கியவான்கள்; அப்போது அகமகிழ்ந்து அக்களியுங்கள்; ஏனெனில், பரலோகத்தில் உங்கள் சம்பாவனை ஏராளமாயிருக்கின்றது; இவ்வண்ணமே உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் உபத்திரவப் படுத்தினுர்கள்” (மத். 5 : 10—12). நீங்களும் உபத்திரவப்படுத்தப் படுவீர்கள்.

“ஏனெனில் நீதிச்சங்கங்களுக்கு உங்களைக் கையளிப்பார்கள்; தங்கள் செபஆலயங்களிலும் உங்களைச் சாட்டைகளால் அடிப்பார்கள்; அவர்களுக்கும், புறசாதியாருக்கும் நீங்கள் எதிர்ச்சாட்சிகளாகும்படி அதிபதிகள் முன்பாகவும், இராசாக்கள் முன்பாகவும் என்னைப் பற்றிக்கொண்டு போகப்படுவீர்கள்.........
என் நாமத்தின் நிமித்தம் யாவராலும் பகைக்கப்படுவீர்கள்; ஆயினும், முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவன் எவனே அவனே இரட்சணியமடைவான்......

“சரீரத்தைக் கொல்லுகிறவர்களாயிருந்தும் ஆத்துமத்தைக் கொல்லமுடியாதவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆனல், ஆத்துமத்தையும், சரீரத்தையும் நரகத்திலே தண்டிக்கவல்லவருக்கே முக்கியமாய்ப் பயப்படுங்கள். ஒருகாசுக்கு இரண்டு அடைக்கலங்குருவிகள் விற்கப்படுகிறதல்லவா? ஆயினும், அவைகளில் ஒன்றுவது உங்கள்பிதாவின் சித்தமின்றித் தரையில் விழமாட்டாது...... ஆதலால் அஞ்சாதிருங்கள்; அநேக அடைக்கலங் குருவிகளைவிட நீங்கள் மேலானவர்களா யிருக்கிறீர்கள்.

“அன்றியும் மனிதர்முன்பாக என்னை அறிக்கையிடுபவன் எவனே, அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என்பிதாவின் முன்பாக அறிக்கையிடுவேன்.

“மனிதர் முன்பாக என்னை மறுதலிப்பவன் எவனே, அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என்பிதாவின்முன்பாக மறுதலிப்பேன்” (மத். 10 : 28—33)

“என்னிலும் தன்தகப்பனையாவது, தாயையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவானல்ல; எனக்குமேலாகத் தன்மகனையாவது, மகளையாவது சிநேகிக்கிறஎவனும் எனக்குப் பாத்திரவானல்ல. தன்சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்பின்செல்லாத எவனும் எனக்குப்பாத்திரவானல்ல” (மத். 10: 37 38).

இளைஞர்களே! வானத்தை அளாவிநிற்கும் கட்டடங்களைக்கொண்ட எமது பாடசாலைகள் பறிமுதலாகின்றனவே என்றதல்ல திருச்சபைத்தாயின் துக்கம். அதில்படிக்கும் பிள்ளைகள், லட்சக்கணக்கானேர் பறிமுதலாகின்றுர்கள் என்பதே காத்திரமும், கரிசனைக்கும் உரியதாம். கட்டடங்களிலும்பார்க்க, தெய்வீகசாயல்கொண்ட உங்களாத்துமங்கள் பெரிதானவை. இவைகளைக் காப்பாற்றுவதற்காய்க் கிறீஸ்தவபெற்றேரும், கத்தோலிக்க திருச்சபையும் என்னதியாகமும் பண்ணத் தயாராயிருக்கின்றனர் என்பதை நன்றியுடன் அறிந்துகொள்ளுங்கள்

—(◯)—

பாண்டியன்தாழ்வு, அர்ச். அன்னம்மாள் கோவில்

## பெற்றோர் தினமும் வாலிபர் சங்கமும்

மேற்படி வாலிபசங்கத்தின் ஆதரவின்கீழ் பெற்ருேர்தினம் சென்ற 16-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை மிகவும் விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. காலை திவ்வியபூசை நடைபெற்றது. சாயந்தரம் 3-30மணி தொடக்கம் திவ்வியசற்பிரசாதஆராதனையும், குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும்சடங்கும் நடைபெற்று,சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்றது.

அதன்பின் கோவில்மைதானத்தில் நடந்த கூட்டமொன்றில் முறையே ஆசிரியர்கள் பி. அருளானந்தம், பி. ஜே அமிர்தநாயகம், எஸ். அந்தோனிப்பிள்ளை முதலியோர் பெற்ருேர்க்கெடுத்துக் காட்டப்பட வேண்டியதாகிய சிலபிரதான உண்மைகளை யிட்டு வேகத்துடன் பேசினர்.

சமய பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும்செயல் மிகப்பாதகமான செயல்என்றும், பிள்ளைகளின் எதிர்கால ஒழுக்கத்திற்குத் தீங்குவிளைக்கும் நடபடிக்கையென்றும் சாதித்தனர் ஆசிரியர் அருளானந்தம்.

பிள்ளைகளின் நல்லொழுக்கத்தைக் கருதவேண்டியோராகும் பெற்ருேர், அவர்களுக்குத் தெய்வத்தின்மேல் பக்தியை ஊட்டுவதற்காய்த் தேவகுமாரன் தமதுமரணசாதனமாய்த் தந்துவிட்டுப் போனதாகிய திவ்விய பூசைப்பலியில் நிதமும் பங்குபற்றும் பழக்கத்தையூட்டி விடுவதைப் போன்ற நற்செயல் இல்லையென்று காத்திரத்துடன் அழுத்திச் சொன்னுர் சம்பத்திரிசியார் கல்லூரிஆசிரியர் அமிர்தநாயகம்.

ஈற்றில் ஆசிரியர் சாமிநாதர் அந்தோனிப்பிள்ளை என்பவர் தம்ஊர் வாலிபர்களால் ஆர்வத்துடன் நடாத்திவரப்படும் கூட்டத்தில் பங்குபற்றுவது தமக்குஅளவில்லாச் சந்தோஷமென்றும், இப்பேர்ப்பட்ட கூட்டங்கள் பெற்ருேர்க்கும், பிள்ளைகளுக்கும் பயன்கொடுக்கக் கூடியனவாதலில் வருடத்துக்குப் பலமுறைகளில் கூடப்படுதல் எவ்வளவோ நலமாயிருக்கும் என்று விரும்பிமுடித்தார்.

சங்கதலைவர் மனுவற்பிள்ளை சிவரத்தினம் பேசிய நன்றியுரையின் பின் கூட்டம்செபத்துடன் முடிந்தது.

---

- யார் தன் இச்சைகளை அடக்கி வாழ்கிருனே அவனே உலகை மேற்கொண்டவனாவான்.
  — அர்ச். சாமிநாதர்

# நிலையான இன்பம்

— மரியாய்மைந்தன் —

இன்பமெங்கே, இன்பமெங்கே என்று ஏங்கித்தவிக்கும் இளைஞர்சமுதாயமே சிந்தித்துப்பார். உன் ஆழ்ந்த சிந்தனைமூலம் உண்மையான இன்பம் எங்கே என்றுதேடு... அந்தஇன்பம் இங்கேஇல்லை. சாதாரணமாக நீ அதை அடைந்துகொள்ள முடியாது.. பணத்தைக்கொண்டு இவ்வுலகில் நீபெற்றுக்கொள்ளும் இன்பமல்ல அது. அதைநீ அடையவேண்டுமானல் உன் வரண்டவாழ்க்கைப் பாதையைப் பண்படுத்திக்கொள். நீ சிந்திக்காத ஒன்றைப்பற்றி அதாவது உன்வாழ்க்கைப் பாதையின் கடைசிமுடிவாகிய சாவைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். இதைப்பற்றிய சிந்தனையே நிலையான இன்பத்திற்கு வழியாகும். இதோ உடனடியாக உன்சிந்தனைக்காய்ச் சிலநிமிடங்களை ஒதுக்கிக்கொள்.

கடைசிமுடிவான சாவைப்பற்றி எண்ணிப்பார். நிலையற்ற இவ்வுலக இன்பத்தில் நீ கவலையற்றமனிதனுகச் சஞ்சரிப்பதையும் எண்ணிப்பார். ஏன் பயமாகஇருக்கின்றதா? ஆமாம், யார்தான் பயப்படாமல் இருக்கமுடியும்? அன்று நீ குழந்தையாய் ஒன்றும்தெரியாத பிஞ்சுள்ளமாய் இருக்கும்போது உன்னைக் கொஞ்சிமகிழ்ந்தவர்கள் இப்போது கிட்டநெருங்கவும் அஞ்சிநிற்கின்றுர்கள். கரடுமுரடான வாழ்க்கைப்பாதையிலே சிந்தனைஅற்ற மனிதனுகப் பலன்அற்ற மரமாக வாழ்ந்தாயே. இப்போது சாவுஎன்றதும் பயமாக இருக்கின்றதா? அன்புள்ள இளைஞனே உன் இருதயத்தைத் திறந்துபார். உன் உடலில் அழுக்குப்பட்டால் உடனே அதைஅகற்றிவாசனைவீசச் செய்கின்ருயே. ஆத்துமத்தில் ஏற்பட்ட கறையைஅகற்ற ஏன் மறுக்கின்ருய்? கறைபடிந்த இருதயத்தோடு நீ ஓர் நாள் சொல்லாமலே விடைபெற்ருல் நீ எங்குபோவாயோ உன்னுல்சொல்ல முடியாது.

ஆகவே, சிந்தனைக்கு இடம்கொடு. இவ்வுலகில் நீஅனுபவிப்பது இன்பமாகத்தோன்றினுலும், மறுஉலக இன்பத்திற்கு இவை உதவமாட்டாது! திரும்பத்திரும்ப எதைநீ அனுபவித்தாலும் சாவைநீ ஓர்முறைதான் அடைவாய். கோடிகோடி இன்பத்தைத் தேடித்தேடிப் பெற்ருலும் மோட்சத்தின் நிலையான இன்பத்திற்கு அவையெல்லாம் ஈடாகாது. சொல்லாமல் வரும்சாவுக்குத் தப்ப முடியாது. எனவே, பரிசுத்தமான சாவுக்காக எப்போதும் உன்னை ஆயத்தப்படுத்திக்கொள்.

“தேவனை நேசியா உள்ளம்
பெரும் பாவமும், பழிகளும்
படிந்திடும் பள்ளம்”

—(◯)—

## அன்புச் சுடரொளியே வழிகாட்டு

சூழ்ந்திடும்இருளினில் அலைகின்றேன் அன்புச்
சுடரொளியே வழிகாட்டு!
பாழ்இருள் இரவிது வீடோ தொலைவினிலே
பரிவொளியே வழிகாட்டு!
பாதையின் முடிவில் உள்ளதோர் காட்சி
பார்த்திடவேண்டிலேன் இங்கென்
பாதம் பெயர்த்திட ஓரடிபோதும்
பரஞ்சுடரே வழிகாட்டு!

●

என்னை அழைத்துச் செல்லென ஏழையேன்
நின்னை இறைஞ்சியதில்லை
என்றுமே முரடாய் என்வழி சென்றேன்
எனினும் வழியினைக் காட்டு
பகட்டொளி உலகப் படரிலே படர்ந்தேன்
பயம்என்னைப் பற்றிய போதும்
அகம்பிடித் தலைந்தேன் அதைஎல்லாம் எண்ணுது
அருட்சுடரே வழிகாட்டு

●

இன்றள வென்னைக் காத்ததுன் ஆற்றல்
இன்னமும் அது வழிகாட்டும்
குன்றிலும் காட்டிலும் சேற்றிலும் மேட்டிலும்
கூடவந்தே கரை யேற்றும்
சென்றிடும்இரவு சேர்ந்திடும்உதயம்
தேவனின் தூதரின் முறுவல்
என்றோ இழந்தது இன்று என்முன்னே மலரும்
எழிற்சுடரே வழிகாட்டு.

(கருதினல் நியூமன்)

தமிழாக்கம்: ஞேசலின் சூசைப்பிள்ளை

---

- தன் சுயபலத்தால் புண்ணியத்தைச் செய்ததாக நினைக்கும் ஆத்மா, தனதுபலனை அதிகம்இழந்துவிடுகிறது.
- தன்சொல்மறந்தார் மானம்இழப்பர், தாய்சொல்துறந்தார் தாயகம் இழப்பர்.
- மனநிறைவு கொண்ட பேர்க்கு எப்பொழுதும் இன்பம்தரும்.

## உறுதிவாக்காளர் பகுதி

1 புதிய வாக்காளர்

47. திரேசா யோசேப்பின் பெர்ணுண்டேஸ் — உந்துகொடை
48. மேரி யோசேப்பின் பெர்ணுண்டேஸ் — உந்துகொடை
49. அந்தோனி சேவியர் யோசேப்பீன் பெர்ணுண்டேஸ் — உந்துகொடை
50. Y. A. பிரான்சிஸ் கபிரியேல் — மடுவக்கொல்லை

2. தற்போது திருச்சபைக்கு எம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் துக்ககரமான ஆபத்துவேளையில், வாக்காளர் யாவரும் தவமும், செபமும் விசேஷ விதமாய்ப் பண்ணும்படி கேட்கிறோம்.

மேற்குறித்துள்ள 50வாக்காளர்களும், தேவசமுகத்தில் எரிந்துகொண்டுநிற்கும் சுடர்ஒளிகள்போல இலங்கக்கடவர். தாங்கள்செய்யும் நற்கிரியைகளைக்குறித்து இடையிடையே நமக்குஅனுப்பினுல் அவை சற்பிரசாதநாதரின் பீடத்தில் ஆராதனைவேளையில் சமர்ப்பிக்கப்படும்.

---

## புனிதர் மொழிகள்

- பூரித்த உள்ளம், எவரிலும் பார்க்க வேகமாய்ப் பரிசுத்ததனத்தில் முன்னேறும்.
  — அர்ச். பிலிப்பு
- எல்லோருடனும் பொறுமையாய் நடந்துகொள். உன்னையிட்டோ அதிக கவனமாயிரு.
  — அர்ச். பிரான்சீஸ் சலேசியார்.
- தன்னையே அதிகாரியாய்த் தெரிந்துகொள்பவன், தன்னை ஓர் பைத்தியகாரனின் கண்காணிப்பில் வைக்கிருன்.
  — அர்ச். பேர்ணுட்
- தேவனில் உன் சிநேகிதர்களை நேசி; தேவனுக்காக உன் சத்துராதிகளைச் சிநேகி.
  — அர்ச். எலிசியுஸ்.
- பெரிய காரியங்களைச் செய்வதற்கே நான் பிறந்தேன்.
  — அர்ச். ஸ்ரனிஸ்லாஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

அன்னையின் அரவணைப்பு, அப்பாவின் அன்பு, தம்பிதங்கையரின் பாசம் இவற்றையெல்லாம் மனிதனுக்கும், தேவனுக்கும் இடையில் அன்புசெய்யும் பணிக்காகத் தியாகம் செய்துவிட்டுச் சிலர் நம்மிடையே வாழுகின்றனர். அவர்களே நமது குருமாரும், சந்நியாசர்களும், கன்னியருமாவர்.

இன்று நமது நாடு இருக்கும் நிலையில் உடலால் ஆகாவிட்டால் உள்ளத்தால் ஆவது அவர்களுடன் ஒன்றுபட்டு உழைப்போம். கத்தியும், ஈட்டியும் கொண்டு போர்க்கோலம் பூண்டுகொள்ள வேண்டியதில்லை, பக்தியும், பண்பும் கொண்டு செபிப்போம். அவர்களுக்குத் தேவன் உளப்பலம் அருளும்படி உருக்கமாக வேண்டுவோம். பலனுள்ள சிறு தவக்கிரிகைகள் செய்வோம்.

உங்கள் அன்புள்ள அண்ணு.

## ஒருநாளும் இப்படிச் செய்யாதே

எங்கள் கிராமத்தில் உங்களைப் போன்ற ஒரு சின்னப்பையன் இருந்தான். அவன் பெயர் இளம்பூரணன். மூக்கும் முழியுமாகப் பெயருக்கேற்ற அழகான பையன். நிறம் கூடச் செவ்விளனி போலச் செக்கச் செவேரென்றிருப்பான். ஒருகுறை மட்டும். அவனது மேற்சொண்டு நடுவிலே பிளவுபட்டிருந்தது. அவன் பள்ளித்தோழர்கள் அவனை ஓட்டைவாயன் என்று கேலிசெய்துவந்தார்கள்.

இரண்டுமூன்று நாட்களுக்குமுன் பூரணனை அவன்தாய் ஆஸ்பத்திரியில் வைத்திருப்பதாக அறிந்து அங்குசென்றேன். அப்போதுதான் டக்டர் அவன்கட்டுகளை அவிழ்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பிளவுபட்ட சொண்டை இரண சிகிச்சை மூலம் குணப்படுத்தியிருந்தார் வைத்தியர்.

பூரணன் என்னைக் கண்டதும் என்ன கேட்டான் தெரியுமா? "அண்ணு, இனிமேல் ஒருவரும் என்னை ஓட்டைவாயன் என்று சொல்லமாட்டார்கள் அல்லவா?" அவனுடைய தாயின் முகத்தில் கூட மகிழ்ச்சி தாண்டவமாடியது. "ஆமாம்தம்பி, மனிதருக்குக் கவலைகள், குறைகள் ஏற்படுவது தேவன் கையில் உள்ள செயல்; என் குழந்தையின் மனதில் இது பெருங்குறையாக இருந்ததை நான் அறிவேன்" என்று கதையை ஆரம்பித்தாள்.

"என்மகன் எப்போதும் பள்ளிக்கூடத்தில் இருந்து வீடுவந்ததும் ஏதோ ஒன்றைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டேயிருப்பான்; படிப்பதில் கூடக் கவனம் செல்வதில்லை; நான் அந்தக் குறையை அறிந்தபின் அவன் கவலைப்பட்டதில் போதிய காரணம் இருப்பதை அறிந்தேன். எனக்கும்கூட இன்றுவரை ஒரே கவலையாகவே இருந்தது.

"இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன் இளம்பூரணனையும் கூட்டிக்கொண்டு சதாசகாயமாதா நோவனைக்குப் போயிருந்தேன். பக்தி முயற்சிகள் எல்லாம் முடிந்து வீட்டுக்குத்திரும்பும்போது மகனுடைய பள்ளித்தோழர்கள்சிலர் கூட்டமாக வந்தார்கள். அவர்களைக் கண்டதும் பூரணன் மருண்டுமருண்டு என்பின்னேவந்தான். அந்தமருண்டபார்வையில் எதுவோ இரகசியம் பொதிந்திருப்பதை நான் கிரகித்துக்கொண்டேன். கோவில் வளவை விட்டு வெளியேவந்து ஒரு நூறு அடிதூரம் சென்று வீட்டைநோக்கித் திரும்பவும் எனக்குச் சற்றுப்பின்னுல் வந்துகொண்டிருந்த இளம் பூரணனது அத்தனைபள்ளித்தோழர்களும் ஒரே குரலாக "ஓட்டை வாயன்" என்று உரக்கக் கத்தினர்கள். எங்களுக்கு முன்னுல் சென்றுகொண்டிருந்த அத்தனை ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் என்னையும், என் மகனையும் திரும்பிப் பார்த்தார்கள். மகன் என்முகத்தை நிமிர்ந்துபார்த்தான். அந்தப்பார்வை, இதுதான் அம்மா என்னை வருத்தும் குறை; இதற்கு வழிசொல்லுங்கள் அம்மா என்று கெஞ்சுவானைப்போல் இருந்தது. இரண்டு மூன்று நாட்களாக உணவுகூட அருந்தாமல் இதை எண்ணிஎண்ணி அழுதுகொண்டிருந்தான். அதன்பின்தான் நான் வைத்தியரைக் கண்டு இந்த 'ஒப்பறேஷ'னுக்கு உடன்பட்டேன்."

சொல்லுதம்பி, கஷ்டங்கள் கவலைகளைச் சகித்துக்கொள்ளலாம். மனிதரில் உள்ள சில குறைகளை மையமாக வைத்து அவர்கள் மனம் குன்றிப்போகும்படி கேலிசெய்வதற்கும் பள்ளிப்பிள்ளைகள் இப்போதே பழகிக்கொண்டால் பெரியவர்களானதும் இது எத்தனை மோசமான பழக்கமாகப் போய்விடும்.

அன்புள்ள தம்பி, தங்கையரே! பார்த்தீர்களா, ஒரு மனிதனிடத்தில் உள்ள குறைபாட்டை இலக்காக வைத்து அவர்களைக் கேலிசெய்வது எத்தகைய ஒரு தகாத பழக்கம். ஒரு பெரிய உள்ளமும், உங்களைப் போன்ற பிஞ்சு உள்ளம் ஒன்றும் பட்ட வேதனையைக் கண்டீர்களா?

என் அருமைத் தம்பி, ஒருபோதும் இப்படிச் செய்யாதே. துட்டப் பையன் என்று பெயர் எடுக்காதே. ஒருநாளும் அடுத்தவர் மனதைப் புண்படுத்தும் செயலைச் செய்யாதே.

### உங்களுக்குத் தெரியுமா?

(லூ. பாக்கியசீலன்)

1. லண்டன்நகர தேவாலயத்தில் பிரமாண்டமான கிறீஸ்துநாதரின் வெண்கலச்சுரூபம்ஒன்று அப்போது நிறுவப்பட்டது. அதன் உயரம் என்ன? அதனைச் செய்த சிற்பியின் பெயர் என்ன?

2. உலகத்திலே அதிகம்நீளமான கப்பலின் பெயர் என்ன? அதன் நீளம் எத்தனை அடி?

3. கொறியாவிலே சமீபகாலத்தில் கலகம் ஏற்படுவதற்கு என்ன காரணம்?

4. ருஷியாவின்மீது உளவுபார்க்கப் பறந்துசென்று சிறைப்பட்ட அமெரிக்க விமானியின் பெயர் என்ன? அவர் எத்தேதியில் கைதானுர்?

5 பத்துஅடி உயரமான கதிர்ப் பாத்திரம் எத்தேசத்தில் எந்தத் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது?

[இவற்றிற்கு விடை தெரிந்தால் அடுத்த வாரம் வெளியாகும் விடைகளுடன் உங்கள் விடைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.]

## அன்புக்கன்பு

— 'அன்னு' —

மனிதன்மேல் வைத்த அன்பின் நிமித்தம் தேவன் மனிதனுனர். மாட்டுக்கொட்டிலில் பிறந்தார். வறுமையில் வளர்ந்தார். அழுவாரோடு அழுதார். மகிழ்வாரோடு மகிழ்ந்தார். பட்டமரத்தில் பழுத்த கனியாகப் பாரச் சிலுவையில் பலியானுர்.

பச்சைமரத்திலே ஏதேன்தோட்டத்தில் பழுத்தகனி பாவத்தின் வித்து ஆனது. பரகதியை நமக்கு இல்லாமல் பறித்துக்கொண்டது. கல்வாரிமேட்டின் உச்சியில் பட்ட மரத்திலே பாடுகளில் கனிந்து தொங்கியகனி பாவத்தழையை அழித்து மனிதனுக்குப் பரகதியின் வழியைத் திறந்தது.

அந்த மாருத அன்பின் பலி வழியாக மனிதனேடு தாம் ஒன்றிவாழ்வதற்கு வழிசெய்தார். தமக்குப் பின் அன்பிற்கு அன்புசெய்யும் அந்தப்பணிக்குச் சிலரைத் தெரிந்துகொண்டார். அவர்களே அன்புப் பலிமூலம் நமக்கு ஆண்டவரைத் தினமும் திருவிருந்தாகத் தரும் குருமார்.

அன்னை, தந்தை, அக்காள், தம்பி என்ற அன்புப் பிணைப்புகளை எல்லாம் அகலஎறிந்துவிட்டு மனிதனுக்கும், தேவனுக்கும் இடையில்நின்று அன்புப்பணி செய்கிறுர். எங்கள் நாட்டைப் பொறுத்தவரை ஏறத்தாளப் பதினேழாம் நூற்ருண்டில் இருந்து கடந்தசில காலம்வரை கத்தோலிக்க தியாகம், கத்தோலிக்க சேவை என்ற இரண்டினையும் குருமார், சந்நியாசர், கன்னியர்வசம் ஒப்படைத்துவிட்டு நாம் அவற்றின் பலனைமட்டும் அடைந்துவந்தோம்.

சீனு, ருஷியா, திபேத்து போன்ற நாடுகளுக்கேற்பட்ட சோதனை நம்மையும் எதிர்கொண்டு நிற்கின்றது. ஆகவே, உறங்குவதை விடுத்து ஊக்கத்துடன் விழித்தெழுவோம். சொல்வீரம் விடுத்துச் செயல்வீரம் புரிவோம்.

கத்தியும், ஈட்டியும் கொண்டு போர்க்கோலம் பூணவேண்டாம். பக்தியும், பண்பும்கொண்டு செபிப்போம். இத்தனை திரளான மனித கூட்டத்திற்குப் பிணை ஆட்களாய் நிற்கும் சிறுதொகையினரான அன்புக்கு அன்புசெய்யும் குருமாருக்காக — இளம் துறவிகளுக்காக, கன்னியருக்காக உள்ளத்தால் உதவுவோம்.

செபிப்போம். சிறிய பரித்தியாகக் கிரிகைகள் செய்வோம். அன்னையின் அன்பையும், அப்பாவின் அரவணைப்பையும் விடுத்து, எமக்கு அன்புத் தொண்டுபுரியும் தொண்டர்களுக்குத் தேவன் தளராத உளப்பலம் கொடுக்கும்படி தேவனிடம் வேண்டி அன்புக்கு நாமும் அன்புசெய்வோம்.

### துளி அமுதம்

"உனக்குள்ள கவலைகளைப்பற்றிச் சிந்தியாதே; கடமைகளைப்பற்றியே சிந்திக்கப் பழகிக்கொள்; அப்போது கவலைகள் மறைந்துபோகும்; கடமைகள் நிறைவேறும். சூரியனை நிமிர்ந்துபார்க்கும் எவனும் தன்நிழலைக் காணமாட்டான்."

* * *

"எங்கள் தேவைகளுக்காக நாம் செலவுசெய்யும் பணம் தூரத்தைக் காட்டும் மைல் கல்லைப்போலப் பின் தங்கிவிடும். பிறர் நலனுக்காகச் செலவுசெய்யும் பணம் பரகதிக்குப் பறந்துசெல்ல நமக்கு இரக்கைகள் ஆகிவிடும்."

— ஆர். டி. ஹிச்கொக்

* * *

"வாழ்க்கையை நான் ஒருமுறைதான் வாழமுடியும்; அது கணநேரத்தில் ஒழிந்தும்போகலாம்; ஆகவே, அந்தக் குறுகிய காலத்துள் நான் செய்யக்கூடிய—இகத்திற்கும், பரத்திற்கும் பயன் தரக்கூடிய நல்ல செயல்களை எல்லாம் செய்வேன்."

— 'பெண்'

**பாலர் பக்கம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

பெயர்: ..............................

ஆண் / பெண்: ..............................

பிறந்த திகதி: ..............................

வகுப்பு: ..............................

பாடசாலை: ..............................

வீட்டு விலாசம்: ..............................

விசாரணைப்பங்கு: ..............................

முதல் நன்மை பெற்ற திகதி: ..............................

உறுதிப்பூசுதல் பெற்ற திகதி: ..............................

விண்ணப்பப்பத்திரம் அனுப்புவோர் மூன்று விண்ணப்பப் பத்திரங்களையும் ஒன்ருக வைத்து அனுப்பவேண்டும். தனித்தனி அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண கத்தோலிக்கரின்

## வேதப்பரப்புதல் தொண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார் சமூகங்களுக்கும் அவரைக் கொண்டுசெல்லவேண்டும். யேசுக் கிறீஸ்துநாதரை எல்லாஇடங்களுக்கும் கொண்டுசென்று மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தும்வாய்ப்பு கிறீஸ்தவர்களுக்கு உண்டு. எனவே, ஒவ்வொரு கிறீஸ்தவனும் தனக்குக்கிடைத்திருக்கும் இவ்அரிய சந்தர்ப்பங்களைக் கைநெகிழாது கிறீஸ்துநாதரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கவேண்டும்.

அத்துடன் விசுவாசப்பரப்புதல் வேலையில் இடையறுதுஈடுபட்டுஉழைக்கும் குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளை நினைவூட்டவேண்டும். அவர்கள்செய்யும் அரும்பணிகளுக்குத் தேவையான பொருளுதவியையும் நாம்செய்யவேண்டும். ஒருபட்டாளத்தை நிர்வகிப்பதற்குத் தேவையான பொருளை நாங்கள் எப்படிக் கொடுத்துதவுவோமோ அவ்விதமே கிறீஸ்தவ தொண்டில் பணியாற்றும் குருமார். சந்நியாசர், கன்னியாஸ்திரிகளுக்கும் எம்மாலான பொருளுதவிகள்செய்ய முன்வரவேணடும்.

ஆதலால் கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் வேதபோதகவேலை தனது சொந்த வேலை — அதைச் செய்வது தனது கடமையும், உரிமையும்—என்ற எண்ணத்துடன் செயலாற்றவேண்டும். அத்துடன் இப்பணியில் ஈடுபட்டுழைக்கும் திருச்சபையின் வெற்றி கிறீஸ்தவர்களாகிய எங்கள்ஒவ்வொருவரினதும் வெற்றிஎனவும், அதற்கு ஏற்படும் பீடைகள், துன்பதுரிதங்கள், அவமானங்கள் நம்மில்ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டவையெனவும் நன்குணர்ந்து செயலாற்றவேண்டும்.

— M. A.

## செஞ்சீனவில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தமதுநேரத்தைச் சிறைச்சாலையிலே தமக்குக்கொடுக்கப்படும் ஆங்கில—சீனச்சஞ்சிகைகளை வாசிப்பதிலும், தமதுஅறையைச் சுத்தஞ்செய்வதிலும், தினமும்இருமுறை சிறைச்சாலைமுற்றத்திலே உடற்பயிற்சியெடுப்பதிலும், ஆங்கிலபாஷைபேசுகிறவரான 40வயதுடைய உடன்சிறைப் பங்காளி ஒருவருடன் சம்பாஷிப்பதிலும், செபத்திலும் செலவிடுகின்றார். இற்றைக்கு 22மாதங்களின்முன் அவர் கைதுசெய்யப்பட்டதுமுதல் திவ்விய பூசை நிறைவேற்றுதற்கானவசதிகள் அவருக்கு அருளப்படவில்லை. தமது திருச்சபை மந்திரமாலைப் புத்தகத்தையோ, அன்றேல் தமது செபமாலையையோ வைத்திருக்க அவர் அனுமதிக்கப்படுவதில்லை. நான்பட்டதாரியான 50-ம்ஆண்டு நிறைவுவிழாவின்போது எமிற்ஸ்பேர்க்நகரிலுள்ள அர்ச். மரியநாயகியின் கல்லூரியால் எனக்குஅன்பளிப்பாக வழங்கப்பெற்ற தங்கச்செபமாலைஒன்றை எனதுசகோதரருக்குக் கொடுக்கமுயன்றேன். ஆனால், "அதனை வைத்திருக்கவேண்டிய அவசியம் அவருக்கில்லை" என்று கம்யூனிஸ்த அதிகாரிஒருவன் எனக்குச்சொன்னான். ஆயினும் நான் அவருக்கென்று கொண்டுசென்ற இனிப்புப்பண்டங்கள், உடுப்புகள், இனிமையான கேக்குகளைக்கொண்ட சிறுகட்டுகளையும், எனதுபேரப்பிள்ளைகளின் படங்கள்சிலவற்றையும் அவர்கள் அவருக்குக் கொடுத்தார்கள்.

மாதந்தோறும் செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பிவைக்கும் பார்சல்ஒன்றையும், தமதுகுடும்பத்தினரிடமிருந்து ஒருபார்சலையும் தாம்பெற்றுவருவதாக எனதுசகோதரர்கூறினார். ஆனால்,தாம் கைதுசெய்யப்பெற்றபின் கடந்த22 மாதங்களிலும் 22கடிதங்களே தமக்குக் கொடுக்கப்பட்டதென்று அவர் தெரிவித்தார்.

(தொடரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3196**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

நாரந்தனை
கந்தப்பர் கனகசபை
— வழக்காளி.

எதிராக
சரவணை
நாகேந்திரர் வேலாயுதபிள்ளை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3196-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1960-ம்ஆண்டு கார்த்திகைமீ 12-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 607-83-ம். ரூபா 400-க்கு 23-12-1959 தொடக்கம் 17-3-60 வரை 15 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமான வட்டியும். கோட்டுச் செலவு ரூபா132-55 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று, சரவணையிறை "வழுக்கற்புலம் கிழக்கு, வழுக்கற்புலம் தாழ்வு பிரிவுகளும்" பர. செ. இல. பன்னிரண்டு (பர. செ. இல. 12). எல்லை: கிழக்கு — பொன்னையா பெண் பொன்னுச்சிக்கும், கணபதி முத்தையாவிற்குமுரிய வாதனங்கள். வடக்கு — லிங்கப்பிள்ளை நாகலிங்கத்திற்குரிய வாதனம். மேற்கு —லிங்கப்பிள்ளை நாகலிங்கத்திற்கும், மறுபேர்கட்குமுரிய வாதனம். தெற்கு—சுப்பிரமணியம் பெண்சின்னம்மாவிற்கும், பொன்னையா பெண் பொன்னுச்சிக்குமுரிய வாதனங்கள். இதடங்கலும். இதன்பதிவு C. 177/173.

**வை. ஏரம்பமூர்த்தி,**
கொம்மிஷனர்.

காரைநகர், 1960-ம் ஆண்டு புரட்டாசிமீ 29-ம் திகதி.

## மரண அறிக்கை

திரு. மனவற்பிள்ளையின் பிரியமனைவியும், திரு. எம். பத்திநாதர், சங். சிஸ்றர் பிளண்டினா, திருமதி இம்மனுவேல், திருமதிஅந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளைஎன்பவர்களின் தாயுமான திருமதி யுவக்கினா செல்லம்மா ஒன்றரைமாதகாலமாக நெருப்புக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்து, வவுனியாஆஸ்பத்திரியில் தகுந்தசிகிச்சைபெற்றும் குணமுறாது சென்ற27-9-60செவ்வாய்க்கிழமை வீட்டுக்குக்கொண்டுபோகப்பட்டு, அந்தியதேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன்பெற்றுத் தனதுபிள்ளைகள், பேரப்பிள்ளைகள் புடைசூழ்ந்து ஆறுதல் கூறியும், செபங்கள்சொல்லியும்நிற்க இரவு 11-55 மணிக்கு மரணமாயினார். இவபெரியவிளானில் பிறந்தவ. வவுனியாவில் வசித்திருந்தவ. இவவுடையஆன்மா சாந்தியடைவதாக.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் ஒருகுத்தகைவாங்கி நடத்திய எட்டுமாதங்களிலும் எனதுவிரோதிகள் சிலரால் எனக்குண்டான நட்டமும், கவலையும், கரைச்சலும் இம்மட்டன்று. அரசாங்கத்தின் உதவியைநாடினேன். கிடைக்கவில்லை. பொலிஸரின்துணையைத் தேடினேன். சித்திக்கவில்லை. கடைசியாக ஆற்றாது எனது உயிருக்குமுதலாய் ஆபத்துவரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. பரிசுத்த சதாசகாயமாதாவின் ஒத்தாசையையும், அர்ச். அந்தோனியாரின் உதவியையும் இரந்துமன்றாடினேன். அதன்மேல்அவர்களின் உதவிஒத்தாசையால் சந்தையில் எனக்கு உண்டாயிருந்த கஷ்டங்களெல்லாம் அறவேநீங்கிப்போயின. சதாசகாயமாதாவே உமக்கு என் மனமுவந்தநன்றி தெரிவிக்கிறேன். அர்ச். அந்தோனியாரே உமதுநாமம் ஸ்துதிக்கப்படுவதாக.

[illegible]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 622**

சுதுமலை
பொன்னையா ஆறுமுகம்
— வழக்காளி.

எதிராக
ஆனைக்கோட்டை
தம்பையா சிவசுப்பிரமணியத்தின் ஆதனத்துக்கு சட்டப்படி பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை சுதுமலை — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 622-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகள் 1960-ம்ஆண்டு கார்த்திகைமீ 12-ம்உ (12-11-60) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 1266-ம், இதற்குத் தீர்வை ரூபா 1000-க்கு 3-11-55 திகதி தொடக்கம் 2-12-55 வரை 100-க்கு 10% வட்டியையும், பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5%வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 231-43 சதமும்.

### காணி விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு, மானிப்பாய்க் கோயிற்பற்று, நவாலிஇறை "பறையன்பனை" பர. நிலஇலாச்சம் 4-ம், குளி $4\frac{1}{8}$. இதில் கிழக்குப்புறமாகப் பர. நில இலாச்சம் $2\frac{1}{2}$யும், வீடும் போட்டிக்கோவும்,குசினியும், கிணறும், இன்னும் பயிர்களும். எல்லை: கிழக்கு — சின்னத்தம்பு கைம்பெண் தெய்வானைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — முருகேசு சிவசம்புவுக்கும், பெண் பொன்னம்மாவுக்கும் உரிய ஆதனம். தெற்கு—அருணாசலம் தாமோதரம்பிள்ளைக்கும், பங்காளருக்கும்உரியஆதனம். குறித்த கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், மேற்கெல்லைக்காணி புறநீங்கலாக இதடங்கலும்.

2. மேற்படி ஆனைக்கோட்டை இறை "நளவன்குண்டு" பர. நிலஇலாச்சம்$5\frac{1}{2}$. கிணறும், பயிர்களும். எல்லை: கிழக்கு —சின்னத்தம்பு பெண் சின்னப்பிள்ளைக்குரிய வாதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — இராமு வேலுப்பிள்ளைக்கும், பெண் சிதம்பரத்திற்கும், மறுபேருக்குமுரிய வாதனம். தெற்கு—சுப்பர் வைத்திலிங்கத்திற்கும், பங்காளருக்கு முரிய வாதனம். குறித்த கிணற்றில் புறப்பங்காளருக்குரிய பங்கு புறநீங்கலாக இதடங்கலும்.

3. மேற்படி நவாலிஇறை "அந்திரான் வயல்" பர. நெல் இலாச்சம் 7. எல்லை: கிழக்கு—தியாகராசா பெண் இராசம்மாவுக்குரிய வாதனமும், வாய்க்காலும். வடக்கு—தம்பிப்பிள்ளை பெண் தங்கம்மாவிற்குரிய வாதனம். மேற்கு —தியாகராசா பெண் இராசம்மாவுக்கு உரிய ஆதனம். தெற்கு — சுவாமிநாதர் சிற்றம்பலத்துக்கும், சகோதரர்கட்குமுரிய வாதனம். இதடங்கலும்.

4. மேற்படி நவாலிஇறை "ஆவரந்திலாக்கை" பர. நெல் இலாச்சம் $7\frac{7}{8}$. எல்லை: கிழக்கு—வேலாயுதர் மகள் சின்னாச்சிக்குரிய வாதனம். வடக்கும், மேற்கும்—வாய்க்கால். தெற்கு—கற்பகத்தினாதனம். இதடங்கலும்.

பதிவு இலக்கம்:

E. $\frac{100}{290/29}$ $\frac{159}{96}$ & $\frac{47}{11}$

**சி. செ. மாரிமுத்து,**
கொம்மிஷனர்.

விதானைவளவு, சித்தங்கேணி,
3-10-60.

ஞானவாசிணையினால் நாம் தேவனைத் தேடுகிறோம். தியானத்தினால் அவரைக் கண்டுபிடிக்கிறோம்.

—அர்ச். வேணாட்.

## NOTICE

M. D. J. Nicholas Appuhamy of the Lanka Musical Works will be at Jaffna for Three Weeks from 6th October 1960, at The Renown Bakery, Small Bazaar, Jaffna, to undertake the Repairing and Tuning of all Musical - Instruments, Piano, Organ, Harmonium etc.

Repairing of Type-writers is also undertaken.

**M. D. Nicholas Appuhamy,**
Bopitiya,
Pamunugama.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 29-ம்தேதி சனிக்கிழமை பி. ப. 4மணிக்குச் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வமயம் சிலஅங்கத்தவர்கள் தமது நவாப்பியாசகாலத்தைத் தொடங்குவார்கள். பகுதித்தலைவர்சங்கம் கூட்டத்தின்பின் நடைபெறும்.

A. S. Francis OF Mary,
சபைக் கர்த்தருக்காக.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2784**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

நெடுந்தீவு
முருகப்பர் நாகமணி
— வழக்காளி.

எதிராக
யாழ்ப்பாணம், 6, பலாலிறோட்
1. ஆள்வார் செல்லையாவும்
2. மனைவி சிவயோகமும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2784-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1960-ம்ஆண்டு நவம்பர்மீ 19-ம்உ (19-11-60) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2873-ம், மேலும் ரூபா 2000-க்கு 8-4-1959 திகதி தொடக்கம் 10-9-1959 திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 12% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 219-75 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை "இலகடி" நிலப்பரப்பு 1 குளிகள் $8\frac{7}{10}$. கிணற்றின் பங்கும் 2-ம், 1-ம் லொட்டுகளின் வடக்குக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றுக்குப் போகும், 4-வது என்று அடையாளமிட்ட லொட்டின் நெடுக வழிவாய்க்கால் உரித்தும், வீடும், குசினியும், மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும். யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1348-ம் இலக்கப் பிரிவிடுதல் வழக்கில் அணைக்கப்பெற்ற, உத்தரவுபெற்ற உலாந்தா N. F. இரத்தினகோபால் அவர்களால் 5-9-1932-ல் தயாரிக்கப்பெற்ற 66-ம்இலக்கப்படத்தில் 2-வது லொட் என அடையாளமிடப் பெற்றதுமான, மேலே சொல்லப்பட்ட பரப்பு 1 குளிகள் $8\frac{7}{10}$-க்கும், எல்லை: கிழக்கு— லொட் 3 (கோவிலாதனம்). வடக்கு — ஆள்வான் வல்லிபுரத்திற்குரிய லொட், 1-ம் படத்தில் காட்டிய 4-வது லொட்டின் முகப்பு. மேற்கு—றோட்டு. தெற்கு —சின்னவன் கைம்பெண் ஆச்சிப்பிள்ளையினுதனம். இதடங்கலும். பதிவு இல. D. 208/138.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, 7-10-60.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 20-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org